பாரதமணி

தாரண வரு
சித்திரை மீ

விலை அணா 4

APRIL 33
1944



மரத்தின்கீழ் மடம் !
(லங்கையிலுள்ள ஒரு பௌத்த மடம்)

ஸன்லைட் சோப் காய்ச்சும் மற்றொருவன் சொல்லுகிறான் . . .

“‘சுயசக்தி’யே சுயமாக வெளுக்கும் நுரையின் இரகசியம். இந்த சக்திதான் ஆடைகளிலிருந்து தானாகவே அழுக்கைப் போக்க உதவுகிறது.’ சுய சக்தி வாய்ந்த சோப்பானது அழுக்கைத் தொட்டவுடன் அதைப் பற்றிக் கொள்ளுகிறது. ஆடைகளை ஸன்லைட் சோப்பின் நுரையில் நனைத்துப் பிறகு தண்ணீரில் அலசினவுடன் நுரையோடு அழுக்கும் போய்விடுகிறது.”



ஸன்லைட் சோப்

சுயமாக வெளுக்கும் நுரை உடையது

S. 66-33 TM

ஒரு லீவர் பிரதர்ஸ் தயாரிப்பு

மாத வெளியீடு

ஆசிரியர் :
கா. சி. வேங்கடரமணி

காரியாலயம் :
34, அலமேலுமங்காபுரம், மயிலாப்பூர், சென்னை

வருட சந்தா ரூபா 3 | தனிப்பிரதி அணா 4

மாலை 11 | **APRIL 1944** : தாரண ௵ சித்திரைமீ | முத்து 4

பொருளடக்கம்

விஷயம்			பக்கம்
1.	புது வருஷமே, வா! ...	சி. சுப்பிரமணிய பாரதி	... 115
2.	நாடகத் தமிழ் ...	வே. நாராயணன், எம்.ஏ., எம்.எல்.	... 116
3.	இந்தியாவின் ஒப்பற்ற தலைவர்		... 118
4.	நடராஜ தரிசனம் ...	பி. ஸ்ரீ.	... 119
5.	பெண்களின் முன்னேற்றம் ...	காந்திஜி	... 121
6.	திருப்பதி மலை ரஸ்தா ...	(படங்கள்)	... 124
7.	ஸம்ஸ்கிருத கீர்த்தனைகள் ...	ய. மஹாலிங்க சாஸ்திரிகள், எம்.ஏ., பி.எல்.	... 126
8.	சூரிய மேடுகள் ...	டி. பி. நவநீத கிருஷ்ணன்	... 129
9.	சாந்தி ...	சூர்யதாஸன்	... 132
10.	கொலைகாரன் ...	"ஜெமன்"	... 137
11.	உருத்திய ஊக்கம் ...	டி. வி. ராதாகிருஷ்ண சாஸ்திரி, எம். ஏ., எல். ஐ. எம்.	... 141
12.	கர்மபூமியில் யுத்தம் நடக்கிறது		... 146
13.	புதுப் புத்தகங்கள்		... 148
14.	மணிப்புரி சமஸ்தானம்		... 151

"பாரத மணி"யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் வெளிவரும் பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல.

நாராயணன் கம்பெனி வெளியீடு

புது வருஷமே, வா!

[சி. சுப்பிரமணிய பாரதி]

ஒளி படைத்த கண்ணினாய் - வா வா வா
உறுதி கொண்ட நெஞ்சினாய் - வா வா வா
களி படைத்த மொழியினாய் - வா வா வா
கடுமை கொண்ட தோளினாய் - வா வா வா
தெளிவு பெற்ற மதியினாய் - வா வா வா
சிறுமை கண்டு பொங்குவாய் - வா வா வா
எளிமை கண் டிரங்குவாய் - வா வா வா
ஏறு போல் நடையினாய் - வா வா வா.

வெற்றி கொண்ட கையினாய் - வா வா வா
விநய நின்ற நாவினாய் - வா வா வா
முற்றி நின்ற வடிவினாய் - வா வா வா
முழுமை சேர் முகத்தினாய் - வா வா வா
கற்றலொன்று பொய்க்கிலாய் - வா வா வா
கருதிய தியற்றுவாய் - வா வா வா
ஒற்றுமைக ளுய்யவே நாடெல்லாம்
ஒரு பெருஞ் செயல் செய்வாய் - வா வா வா.

நாடகத் தமிழ்

[வே. நாராயணன் எம்· ஏ., எம். எல்.,]

வேதம் அனந்தம்; அவற்றை வியாச முனிவர் இருக்கு, யஜுஸ், ஸாமம் என்று மூன்றாக வகுத்தார். தமிழும் அனந்தம்;.அவற்றை குறுமுனிவர் இயல் இசை நாடகம் என்று மூன்றாக வகுத்தார்.

தொல்காப்பிய இலக்கணம் இம் மூன்று தமிழிற்கும் பொது. செய்யுளியலில் இவை மூன்றும் வருகின்றன.

இயல் என்பது அசை சீர் அடி முதலிய இலக்கணங்களோடு புலவர் இயற்றிய செய்யுள்; இசை என்பது பாணன் பாடுவதற்கு ஏற்றவாறு பண்கள் வாய்ந்த பாடல்; நாடகம் என்பது கூத்தன் விறலி இவர்கள் அபிநயங்களோடு ஆடிக் காட்டுவதற்கு ஏற்றவாறு நாடக இலக்கணங்களோடு பொருந்திய பாடல்; நாடக இலக்கணம் தாளத்தையும் சந்தத்தையும் பிரதானமாகக் கொண்டது. மெய்ப்பாடு நாடகத் தமிழின் சிறப்பு.

நற்றிணை முதலிய தொகை நூல்கள் எட்டிலும் இம்மூன்று தமிழ்களும் காணப்படுகின்றன; இது பற்றியே இவை 'முத்திறத் தொகை நூல்கள்' என்றும் 'முத்தமிழ்ச் சங்கங்கள்' என்றும் பெயர் பெற்றன. இவற்றுள் கலித்தொகையும் பரிபாடலும் இசைத் தமிழ். இசைப் பாட்டினைச் செந்துறை மார்க்கத்தின என்றும் நாடகச் செய்யுளை 'வெண்டுறைச் செய்யுள் போல்வன' என்றும் கூறுவர் உரையாசிரியர்.

'புலன்' என்பது ஒருவகை நாடகச் செய்யுள்; 'விளக்கத்தார் கூத்து' முதலிய நாடக இலக்கியங்கள் மறைந்து போயின. ஆயினும், நாடகத் தமிழைச் சார்ந்த பகுதிகள் பலவற்றை, எட்டுத்தொகையிலும் உரையாசிரியர்கள் மேற்கோளாகக் கையாண்ட ஏனைய செய்யுட்களிலும் கண்டுகொள்ளலாம்.

சிலப்பதிகாரம் என்பது முத்தமிழும் விரவிவரும் நூல். கானல் வரியிலேயுள்ள 'வாழி காவேரி' என்று முடிவு பெறும் மூன்று பாடல்களும் 'யாழில் இட்ட பாட்டு' என்பது பழையவுரை. கானல் வரி முழுதுமே இசைப் பாட்டு; வேட்டுவ வரியிலுள்ள தாழிசைகள் கூத்திற்குரியனவாகி நாடகத் தமிழாயமைந்தன. ஊர் சூழ்வரியும் குன்றக் குரவையும் ஆய்ச்சியர் குரவையும் நாடகத் தமிழ்ப் பகுதிகளையுடையன.

இங்கு, நாடகம் என்பது பல காட்சிகளையுடையதாய்ப் பல நர்டகபாத்திரங்கள் திரைமுன் தோன்றி நடித்துக் காட்டுங் கதையன்று; நாடகம் என்பது நாட்டியம் அல்லது கூத்து. இசையோடு கலந்த செய்யுளை இயற்றுவது கடினம்; அதினும் கடினம் இசைக்கும் நாடகத்திற்கும் ஏற்றவாறு நாடகக் கவி புனைதல். தற்கால நாடகங்களை எழுதுவோர்க்கு இத்தகைய கட்டுப்பாடுகள் இல்லை. பாட்டும் கூத்தும் நாடகத்திற்கு இன்றியமையாதன என்னும் கொள்கை கர்ஞடகக் கொள்கையாகிவிட்டது. ஆயினும் தமிழ்ப் பொது மக்களின் மனதை இன்றும் கவர்வன பாட்டும் கூத்துமே. இதுபற்றியே, திரைப் படங்களிலும் இவற்றையே நம்மவர் கொண்டாடுகின்றனர். கதை தழுவியெழுதிய நாடகங்களிலும் இசையும் அபிநயமுமே பிரதானமாகக்கொள்ளப் பெற்றன. உலகில் நடைபெறும் காட்சிகளை அப்படியே படம் பிடித்துக் காட்டுவது நாடகமாகாது.

ஆயர்பாடியில் எரு மன்றத்து
மாயவனுடன் தம்முன் ஆடிய
வால சரிதை நாடகங்களில்
வேல் நெடுங்கண் பிஞ்ஞையோடு
ஆடியகுரவை ஆடுதும் யாம்

என்பது ஆய்ச்சியர் குரவையில் உள்ளது.

இதன் பொருள் : "முன்னர் ஆயர் பாடியில் எருமன்றத்து மாயவன் தமையனோடு ஆடிய பால சரித நாடகங்கள் பல உள ; அவற்றுள் வேல்போலும் நெடிய கண்ணையுடைய பிஞ்ஞையோடு ஆடியகுரவைநாடகத்தை யாம் ஆடக்கடவோம்." குரவையாவது எழுவரேனும் ஒன்பதின்மரேனும் கைகோத்தாடும் கூத்து. எனவே பிற பால சரித நாடகங்களும் இதைப்போன்ற கூத்துகளே யாம்.

சிலப்பதிகாரத்திற் போலவே, கம்ப ராமாயணம், நாலாயிர திவ்வியப் பிரபந்தம் முதலியவற்றுள்ளும் இசைத் தமிழும் நாடகத் தமிழும் விரவி வந்துள்ளன. இசையிலக்கணமும் நாடக இலக்கணமும் ஆராய்ந்து அறிந்தோர் இவற்றை எளிதிற் கண்டுகொள்ளலாம். கம்ப ராமாயணப் பாடல்களிற் பல அக்காலத்திலும் மலை நாடுகளில் நடிக்கப்படுவதும் அரையர்கள் திவ்வியப் பிரபந்தப் பாடல்களை அபிநயித்துப் பாடுவதும் இவ்வகை ஆராய்ச்சிக்குத் துணை செய்வனவாம்.

திருப்பள்ளியெழுச்சி, திருப்பாவை முதலியன இசைத் தமிழ், தேவாரங்கள் பெரும்பாலனவும் இசைத் தமிழ் ; திருத்தாண்டகங்களும் திருநெடுந் தாண்டகமும் திருக்குறுந் தாண்டகமும் நாடகத் தமிழ். திருப்பல்லாண்டும் நாடகத் தமிழே. திருவாய்மொழியிற் பெரும்பான்மையும் மற்றைப் பிரபந்தங்களுள் சிறுபான்மையையும் நாடக இலக்கணங்களை யுடையவை.

இயற்றமிழைச் சுவைத்தற்குக் கருத்தழகுகளை உய்த்துணரும் வன்மையும் கவிமரபைப் பற்றிய கல்வியும் வேண்டும். இசைத்தமிழைச் சுவைத்தற்கு இன்னிசையை உணருஞ் செவிபடைத்தவனுதல்வேண்டும். நாடகத் தமிழை யுணர்வோனுக்கு இவற்றோடு அபிநயத்தின் நயத்தை உணரும் பழக்கமும் வேண்டும். இதைப்போலவே, நாடகத் தமிழில் எழுதுவோனுக்கும் கருத்தழகுகளை அமைக்கும் வன்மையும் கவிமரபைப்பற்றிய அறிவும் இசை நுணுக்கங்களையறிந்து அவற்றிற் கிசையப் பாடும் திறமையும் அபிநயத்திற்கு ஏற்ற சொற்களைப் பிரயோகிக்கும் வல்லமையும் வேண்டும்.

அணிகளுள் எதுகை, மோனை, திரிபு, மடக்கு, பிராஸம் முதலிய சொல்லணிகளும் இசைக்கு ஏற்றவாறு மெல்லெழுத்து வல்லெழுத்து முதலியவற்றைக் கையாளும் திறமையும் இசையாசிரியனுக்குரியவை. அணிகளுள் உருவகமும் தாளத்திற் கேற்ற சந்தம், சிந்து, தாழிசை முதலியவற்றிலே சொற்களை அளவுபடுத்திப் பெய்யும் திறமையும் நாடகாசிரியனுக்குரியவை.

பிற்காலப் பிரபந்தங்களுள் கோவை, உலா, பிள்ளைத்தமிழ் முதலியன இசைத் தமிழ். குறவஞ்சி, பள்ளேசல், பரணி முதலியன நாடகத் தமிழ். இவற்றையெல்லாம் ஆராய்ந்தால் இசைத் தமிழ் நாடகத் தமிழ் ஆகிய இரண்டிற்கும் உரிய இலக்கணங்களை மீண்டும் வகுத்துக் கொள்ளலாம். இவ்வாறு வகுத்துக் கொள்வதால் தமிழிசையும் தமிழர் அபிநயமும் தமிழர்க்குரிய பண்டைய முறையிலே வளர்வதாகும். இப் பழைய முறையே கர்னுடக சம்பிரதாயம் எனப்படுவது. தமிழ்நாட்டில் வாழ்ந்த இசையாசிரியர்கள், நாட்டிய ஆசாரியர்கள் ஆகியோரிடம் இம்முறையைக் காணலாம்.

நம்முடைய திருக்கோயில்களிலுள்ள மேளம் நாகஸ்வரம் முதலிய வாத்தியங்களும் நாடகக் கன்னிகைகளும் இம் முறையைப் பாதுகாத்து வருகிறார்கள். இசையும் நாடகமும் உணர்ச்சியை எழுப்பிக் கிளர்த்தும்வன்மை யுடையவை. அவற்றைத் தூய மனநிலை பெறுவதற்கு உரிய கோயில் முதலிய இடங்களிலே அமைப்பதால், நம்முடைய மனவெழுச்சி யெல்லாம் கடவுளையே நோக்கும் என்பது சான்றோரின் கருத்தேபோலும். தேவாரம் முதலியவற்றைப் பாடிக் காட்டியும் குறவஞ்சி, பள்ளேசல், பரணி முதலியவற்றை ஆடிக் காட்டியும் கோயிலதிகாரிகள் திருவிழாக்களிலே பொது மக்களுக்கு முத்தமிழின்பங்களையும் புகட்டினர்கள்.

இந்தியாவின் ஒப்பற்ற தலைவர்

ஸ்ரீயுத சத்தியமூர்த்தி இந்தியாவின் ஒப்பற்ற தலைவர்களில் ஒருவர் என்பதற்குச் சிறிதளவும் சந்தேகமேயில்லை. இவர் தனது தாய்நாட்டுக்கு உடல் பொருள் ஆவி இம்மூன்றையும் தியாகம் செய்த மாபெரும் தேசபக்தர்.

இவர் 1942, ஆகஸ்ட் மாதம் பம்பாயிலிருந்து திரும்புகையில், அரக்கோணம் ஸ்டேஷனில் கைது செய்யப்பட்டார். இவருடைய தேக நிலைமை சிறைவாசத்துக்கு ஒத்துக்கொள்ளவில்லை. இவருடைய தேக நிலைமை நாளுக்குநாள் க்ஷீணமடைந்து வந்தது. 'இனி இவர் பிழைக்க மாட்டார்' என்று தெரிந்துகொண்ட பிறகுதான் சர்க்கார் இவரை நிபந்தனையின்றி விடுதலை செய்தனர். சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியில் இவர், அனுமதிக்கப்பட்டார். ஒரு சிகிச்சையும் பலிக்கவில்லை.

1943 மார்ச் மாதம் 28ந்-தேதி இரவு மணிக்கு இவருடைய ஆவி பூத உடலைவிட்டு நீங்கிப் புகழுடம்பில் புகுந்துகொண்டது.

சென்ற மார்ச் மாதம் இவரது முதல் வருஷாந்திர சிரார்த்த தினம் பல இடங்களில் அநுஷ்டிக்கப்பட்டது.

இவர் ஒரு தீவிர தேசீயவாதி மட்டுமல்ல, பெரிய சமூக சீர்திருத்தருங்கூட. சங்கீதம், சிற்பம், சினிமா, நாடகம் முதலிய பல துறைகளிலும் இவர் பாராட்டற்கரிய சேவை செய்துள்ளார். தாய்ப் பாஷை கல்விக்காகப் போராடிய வீரர். 1928-ல் பாரதியார் பாடல்கள் மீது சென்னை சர்க்கார் தடை விதித்த பொழுது இவரது ரத்தம் கொதித்தெழுந்தது. சென்னை சட்டசபையில் ஒரு அவசரப் பிரேரணை கொண்டுவந்து தனது வாக் சாதுர்யத்தினால் பெரும்பான்மையான அங்கத்தினர்களின் ஆதரவைப் பெற்றார். இவர் சம்ஸ்கிருதத்தில் மகா விற்பன்னர். சம்ஸ்கிருதத்தை இந்தியனை ஒவ்வொருவனும் கற்க வேண்டுமென்ற நோக்கமுடையவர்.

1939-ல் இவர் சென்னை நகர மேயர் பதவியை வகித்தபொழுது நகரை அழகு செய்ய எவ்வளவோ திட்டங்களை வகுத்தார். நகர மக்களின் குடிநீர் கஷ்டத்தைத் தீர்க்க பூண்டி திட்டத்தை ஆரம்பித்து வைத்த மகான்.

பிரசங்கம் செய்வதில் இவருக்கிணை எவருமே கிடையாது. சத்தியமூர்த்தி ஆஜர் என்றாலே சென்னை சட்டசபையிலாகட்டும் மத்திய சட்டசபையிலாகட்டும் ஒரு கலகலப்பு ஏற்படும்.

இவ்வொப்பற்ற தலைவருக்கு நாம் ஒரு ஞாபகார்த்தம் ஏற்படுத்த வேண்

நடராஜ தரிசனம்

[பி. ஸ்ரீ.]

பக்தியின் மடியிலேயே வளர்ந்தான் என்று சொல்லவேண்டும். கடவுளை நடராஜாவாக வழிபடுவதில் விசேஷமான திருப்தி.

"நம்மையெல்லாம் ஆட்டிவைக்கிறவன், தானும் ஆடிக்கொண்டிருக்கிறான். அவன் ஆடுவதால் தானே உலகங்கள் ஆடிக்கொண் டிருக்கின்றன! அவனுடைய அற்புதக் கூத்தே உலக சிருஷ்டி; இயற்கையிலுள்ள அழகுச் செல்வமெல்லாம் அவனுடைய சுந்தரக் கூத்து!" என்று ஒரு சமயம் எண்ணமிடுவாள்.

"எவ்வளவு ஒழுங்காக அணுக்கள் முதல் அண்டங்கள் வரை எல்லாம் ஆடுகின்றன! திரைக்குப் பின் பேரறிவு இருந்துதான் இப்படி இவற்றைச் சுகமாக, மங்களமாக, இயக்கிக்கொண்டிருக்கவேணும்! இதைத் தான் பெரியோர் 'மங்களக்கூத்து' என்றும், 'ஞானானந்தக் கூத்து' என்றும் சொல்லுகிறார்கள். இந்த நடனத்தினால்தான் வேதங்கள் ஆகமங்கள் கீதங்கள் கலைகள் முதலான அறிவுத் தெய்வத்தின் நடனங்களும் சாத்தியமாகின்றன!" என்றெல்லாம் ஒரு சமயம் சிந்தனை செய்யத் தொடங்குவாள்.

"ஆனந்தமான நடனமேடையிலே ஆனந்தமான கீதவாத்திய விநோதங்களோடு அகில லோகமும் ஆனந்தம் அடையும் வண்ணம் ஆனந்த நடராஜா ஆடுகிறான்!" என்று உறுதி கொண்டதும், "தாறுமாறாகத் தலைவிரித்தாடும் பேயாட்டமன்று பிரபஞ்சம், தாளத்துடனும் ராகத்துடனும் நடைபெறும் ஆனந்த நாடகம்தான்!" என்ற உணர்ச்சி உண்டாகிவிட்டது.

உலகத்தினூடே, நமது எண்ணங்கள் விருப்பங்களினூடே, நமது செயல்கள் சிருஷ்டிகளினூடே, இயற்கைச் சக்திகளினூடே நடராஜா நடனம் செய்கிறான்!—என்ற உண்மையை உணர்ந்து கொண்டவர்களுக்குக் கவலை ஏது, துன்பமேது, பயமேது?

இவளுடைய ஒரே கவலை தன்னுடைய இஷ்ட தெய்வத்தை அந்த மூர்த்தியின் விசேஷ ஸ்தலமாகக் கொண்டாடப்படும் சிதம்பரத்திலே போய்த் தரிசிக்க வேணுமென்பதுதான்.

ஊரை நெருங்கி வரும்போதே மேலும் மேலும் பொங்கி வருகிறது பக்தி. பார்க்கும் பொருள்களுக்கெல்லாம் அது ஒரு புதிய அழகு தருகிறது. இன்று உதயமான சூரியனுக்குக்கூட, முன்னேதான்

டாமா? கட்டாயம் நாம் ஏற்படுத்தத்தான் வேண்டும். ஒரு சத்தியமூர்த்தி ஹால், ஒரு சத்தியமூர்த்தி புஸ்தகசாலை, ஒரு சத்தியமூர்த்தி பாடசாலை, பேச்சு வன்மை போட்டி; நாம் அவரது ஞாபகார்த்தத்துக்காக எவ்வளவோ செய்ய வேண்டியது இருக்கின்றன. இவைகளை யெல்லாம் நம் நகரிலும் தமிழ் நாட்டிலெங்கும் சத்தியமூர்த்தியின் ஞாபகார்த்த சின்னங்களாக எழுப்புவதற்காக சத்தியமூர்த்தி ஞாபகார்த்தக் கமிட்டியார் நிதிசேர்த்து வருகின்றனர். இந்நிதிக்கு எல்லோரும் தங்களாலான உதவியை அவசியம் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளப் படுகின்றனர்.

(சத்தியமூர்த்தி ஞாபகார்த்த நிதிக்குப் பணம் அனுப்ப விரும்புபவர்கள், "ஸ்ரீ கே. ஸ்ரீனிவாஸன், 'ஹிந்து' ஆசிரியர், சென்னை" என்ற விலாசத்துக்கு அனுப்பி வைக்கவும்.)

பார்த்திராத ஒரு புதிய சோபை ஏற்பட்டிருப்பதுபோலத் தோன்றுகிறது. அந்த ஒளி அதோ இருக்கும் தாமரையை மலரச் செய்திருப்பதுபோல், இவளுடைய இருதயத்திற்கும் ஒரு புது மலர்ச்சி தந்துவிட்டது. வயல்களின் பசுமைக்கு இடையே தாமரையின் அழகு இவளுடைய கவனத்தைக் கவர்கிறது. அந்த இனிமையான தாமரை இறைவனுடைய இன்னருளுக்கு அறிகுறியான திருவடியை ஞாபகப். படுத்துகிறதல்லவா?

இப்போது அதன்மீது ஒரு சிறு பட்சியிருந்து அந்தப் பூவை அசைந்தாடச் செய்கிறது. சாதாரணமான காட்சி: ஆனால் இவளுடைய மனநிலையில் நடராஜ தத்துவத்திற்கு அதுவும் ஒரு சாட்சி போலிருக்கிறது.

இப்படிப்பட்ட உணர்ச்சிகளோடு ஏதோ ஒரு சொப்பன லோகத்தில் அடிவைத்து வருவதுபோல், வயற்காடுகளைக் கடந்து சிதம்பர க்ஷேத்திரத்திற்குள் வருகிறாள். அணைகடந்த வெள்ளமாகி விட்டது பக்திக்காதல். சுவாமியைத் தரிசித்தும், இவள் அடைந்த நிலையைப் பாருங்கள்:

உள்ளம் குளிர,
　　உரோமம் சிலிர்த்(து) உரையும்
தள்ள,விழி நீர் அரும்பத்,
　　தான்மறந்தாள், - புள்அலைக்கும்
தேந்தா மரைவயல்சூழ்
　　தில்லைத் திருநடம்செய்
பூந்தா மரைதொழுத
　　பொன்.

—பழம்பாட்டு

[உரை - வார்த்தை. தள்ள - தள்ளாட; தடுமாற. புள் - பட்சி. அலைக்கும் - அசைந்தாடச் செய்யும். தேந்தாமரை - இனிய தாமரை. தில்லை - சிதம்பரம். பூந்தாமரை- (இங்கே)அழகிய தாமரை போன்ற திருவடி].

உள்ளம் குளிர்ந்து புளகாங்கிதமாகிறாள். ஆனால் வாய்குளிர ஸ்தோத்திரம் செய்ய முடியவில்லையாம். கண்களிலோ ஆனந்தக் கண்ணீர் அரும்புகிறது. இதற்குமேல் ஒரு ஸ்தோத்திரமும் உண்டோ?

திடீரென்று அகண்ட உணர்ச்சி ஏற்படுகிறது. "இது ஓர் ஊரல்ல; ஓர் இடமல்ல!" என்று எண்ணும்படி விரிந்து சர்வ வியாபகமாகிறது சிதம்பரம்! உலகமெங்கும் நடராஜாவின் திருமேனியும் திருநடனமும்தான்!

இப்படித் தன்னை மறந்திருக்கும் நிலையில் இந்தப் பெண்ணைக் கவிஞர் 'பொன்' என்று குறிப்பிடுவது எவ்வளவு பொருத்தமாயிருக்கிறது! அவ்வளவு ஞானசௌந்தரியத்தோடும் பக்திப் பொலிவோடும் விளங்குகிறாள் அல்லவா?

உண்மையில், ஒரு பக்தன் தன் மனத்தையே ஒரு பெண்ணாகக் கற்பனை செய்துகொண்டு பாடிய பக்திப்பாட்டே இது. இதன் கவிதையழகைப் பாடிப் பாடி அனுபவிக்கவேண்டும்.

திருவாங்கூரின் நஷ்டம்

திருவாங்கூர் சமஸ்தான முதல் இளவரசரும், மஹாராஜாவின் மருமகனுமான ஸ்ரீ ராமவர்மா (வயது ஆறு) மார்ச் 22-ந் தேதி யன்று மாலை 6 மணிக்கு காலகதி அடைந்துவிட்டதற்கு மனம் வருந்துகிறோம்.

இச்செய்தி கேட்ட மஹாராஜாவும், மஹாராணியும், இளையராஜாவும் பம்பாயிலிருந்து விமானத்தில் ஓடோடி வந்தனர். திருவாங்கூரின் இம்மாபெரும் நஷ்டத்துக்கு எங்கள் அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

பெண்களின் முன்னேற்றம்

காந்திஜியின் நிர்மாணத் திட்டம்

காந்திஜி பெண்களின் முன்னேற்றம் பற்றிய திட்டத்தை பின்வருமாறு எழுதுகிறார்:—

நான் பெண்களின் முன்னேற்றத்தை நிர்மாணத்திட்டத்தின் ஒரு முக்கிய அம்சமாகவே கருதுகிறேன். சத்யாக்ருஹ இயக்கமானது மிக மிகக் குறுகிய காலத்தில் - ஒருக்கால் வேறு வகையான எத்தகைய முயற்சியாலும் சாதிக்க முடியாத அவ்வளவு பேரளவுக்கு நம்நாட்டு ஸ்திரீகளை முன்னேற்றமடையச் செய்து, அந்தகாரத்திலிருந்து அவர்களைப் பிரகாசமான இடத்துக்குக் கொண்டுவந்திருக்கிறது என்பது முற்றிலும் உண்மை. ஆயின் இன்றும் அநேக காங்கிரஸ் சகோதரர்களுக்கு சுயராஜ்யப் போராட்டத்தில் நம்நாட்டு ஸ்திரீ ரத்தினங்களும் ஆடவரைப்போல் சரிசமமான பங்கெடுத்துக் கொண்டுள்ளார்கள் என்பதும், பொதுநலத் தொண்டில் ஸ்திரீகளும் புருஷர்களுக்கு உதவியாக இருக்கவேண்டுமென்பதும், முற்றிலும் புருஷர்களாலேயே ஏற்படுத்தப்பட்ட பழக்க வழக்கங்களின் காரணமாக - அவை ஏற்பட்டதற்கு எந்த விதத்திலும் காரணஸ்தராக இல்லாத ஸ்திரீகள் நசுக்கப்படுகிறார்கள் என்பதும் தெரியவேயில்லை. அஹிம்சா மார்க்கத்தில் அஸ்திவாரமிடப்பட்டு அமைக்கப்பட்ட வாழ்க்கைத் திட்டத்தில் புருஷர்களுக்குத் தங்கள் வருங்கால நிலைமையை நிர்மாணித்துக்கொள்ள எவ்வளவு அதிகாரம் இருக்கிறதோ, அவ்வளவு அதிகாரம் ஸ்திரீகளுக்குமுண்டு. ஆயின், அஹிம்சா சமூகத்தில் யார் முதலில் தமது கடமையைச் செய்து முடிக்கிறார்களோ அவர்களுக்கே அதில் ஒரு தனிபுரிமை ஏற்பட்டுவிடுகிறது.

சமூக பழக்க வழக்கங்களைப் பற்றிய விதிகளை அச்சமூகத்திலுள்ள ஸ்திரீ புருஷர்களே பரஸ்பரம் கலந்தாலோசித்துச் செய்யவேண்டும். வேறு வெளிச் சக்தி அவ்விதிகளைச் செய்து, அவற்றை அச்சமூகத்தின் மேல் பலவந்தமாகப் புகுத்த முடியாது. புருஷர்கள், ஸ்திரீகள் சம்பந்தமாக இவ்வுண்மையை அறியவில்லை. அவர்கள் தங்கள் ஸ்திரீகளை வாழ்க்கைத் துணைவிகளாகவும், உற்ற சமயத்தில் உதவும் உயிர்த்தோழிகளாகவும் மதித்து நடத்துவதற்குப் பதிலாகத் தங்களை ஸ்திரீகளின் எஜமானர்களாகக் கருதுகின்றனர். இப்பாரத தேசத்தில் உள்ள ஸ்திரீகளின் நிலைமை மேம்பாடடைவதற்கு, காங்கிரஸ் சகோதரர்கள் எல்லாவித உதவிகளையும் தங்கள் விசேஷ கடமையென்று கருதிச் செய்யவேண்டும். முன்பு மனிதனை மனிதன் அடிமையாக நடத்தி வந்த காலத்தில் அவ்வடிமைகள் தாங்களும் என்றாவது ஒரு நாள் விடுபட்டு, சுதந்திர புருஷர்களாகக் கூடும் என்றே அறியவில்லை. இத்தகைய அக்ஞானம் ஸ்திரீகளிடமும் இருந்துவருகிறது. அடிமைகளாக இருந்தவர்களுக்கு முதன் முதல் சுதந்திரம் அளிக்கப்பட்டபொழுது, அதனால் தாங்கள் ஆதரவற்ற அநாதைகளாக்கப்பட்டதாகவே சிறிது காலம் வரையில் அவர்கள் எண்ணினார்கள். ஆனால் ஸ்திரீகளின் நிலைமை அவ்வளவு மோசமானதாக இல்லை. எனினும் பன்னெடுநாட்களாக நம்நாட்டுச் சகோதரிகள் புருஷர்களின் அடிமைகளாகவே பாவிக்கப்பட்டு, நடத்தப்பட்டு வந்திருக்கிறார்கள். காங்கிரஸ் சகோதரர்கள் சமூகத்தில் ஸ்திரீகளுக்குச் சம அந்தஸ்திருப்பதை எடுத்து விளக்கவேண்டும். தவிரவும் ஸ்திரீகள் எல்லாத் துறைகளிலும்

புருஷர்களுடைய உண்மைத் தோழிகளாகவிருந்து உழைக்க முன்வரும்படி அவர்களைத் தூண்ட வேண்டும். இவை காங்கிரஸ் அன்பர்களின் முக்கிய கடமையாகும்.

இதைச் செய்தே தீருவதென்ற சங்கற்பத்தைமட்டும் ஏற்படுத்திக்கொள்ளும் பக்ஷத்தில், இப்புரட்சியை ஆரம்பிப்பது கடினமல்ல. காங்கிரஸ் அன்பர்கள் முதன் முதலில் இச்சீர்திருத்தத்தை தத்தமது வீடுகளில் ஆரம்பித்து நடத்திக் காட்டவேண்டும். ஸ்திரீகளைத் தங்கள் விளையாட்டுக் கருவிகளாகவோ சிற்றின்ப பாத்திரங்களாகவோ பாவிக்காமல், அவர்களைத் தங்கள் சகபாடிகளாகவும், சமூகத் தொண்டில் சம அந்தஸ்து பெற்ற உதவியாளராகவும் மதித்து நடத்த வேண்டும். இம்மாறுதல் சம்பந்தமான உயர்ந்த எண்ணங்களை நேரிடையாக ஸ்திரீகளிடையே பரப்ப முடியாவிட்டால், அவர்களின் கணவர், தந்தை, சகோதரர், புதல்வர்போன்ற நெருங்கிய பந்துக்களிடை இதைப் பரப்பி, அவர்கள் இப்புரட்சி மனப்பான்மை அடையும்படி செய்தால் போதும். பின்னர் கோரிய பலன் தானாகவே ஏற்பட்டுவிடும்.

ஸ்திரீகளின் நிராதரவான நிலைமையைப்பற்றி நான் மேலே வர்ணிப்பதில் ஒருகால் ஒருபக்ஷ நிலைமையைப் பற்றியே மிகைபடக் கூறியிருப்பதாகத் தோன்றலாம். கிராமப் பிரதேசங்களில் ஸ்திரீகள் எல்லாத் துறையிலும் புருஷர்களுக்குச்சரிநிகர் சமானமாகவேஇருந்து வருவதை நானறிவேன். மேலும் அநேக முக்கிய குடும்ப, சமூக காரியங்களில் அவர்கள் பேச்சுக்கே செல்வாக்கதிகம் இருந்து வருகிறது. எனினும் வேறு தேசத்தார் ஒருவர் இங்குவந்து நமது சமூகப் பழக்கவழக்கங்களை மேலெழுந்தவாரியாகக் கவனிக்கும்பொழுது, அவருக்கு நம் தேச சகோதரிகளின் நிலைமையைப் பற்றி மிக மிகத் தாழ்வான மதிப்பே கொள்ள நேரிடுவதால், ஸ்திரீகள் சம்பந்தமான நமது மூடப்பழக்க வழக்கங்களை உடனே வேரோடு களைந்தெறிவது மிக அவசியமும், அவசரமுமாகிறது.

பாபு ராஜேந்திர பிரசாத் திட்டம்

ஸ்திரீகள் சக்தி அல்லது பலத்தை உற்பத்தி செய்யும் பாத்திரங்கள் என்றும், அவர்கள் புருஷர்களின் அங்கத்தில் பாதி என்றும் ஹிந்து சாஸ்திரங்கள் வர்ணிக்கின்றன. ஆனால் துர்பாக்ய வசமாக எந்த வேலையை ஸ்திரீ ஜாதி செய்யவேண்டுமோ அல்லது எதைச் செய்வதற்கு அவர்களுக்குத் தனி உரிமையுண்டோ, அதை அவர்கள் இன்று செய்துகொண்டிருக்கவில்லை. இதற்குக் காரணம் நம்மிடை ஒருவிதமான கெட்ட பழக்க வழக்கம் புகுந்துகொண்டு, திடமாக அது வேரூன்றிவிட்டதேயாகும். எந்த சமூகத்தில், அதன் பேர்பாதி ஜனங்கள் அதாவது பெண்கள் மிகவும் ஒடுக்கப்பட்ட நிலைமையில் இருக்கிறார்களோ, அச்சமூகம் முன்னேற்ற மடையவே முடியாதென்பதை நாம் லகுவில் யோசித்தறிந்து கொள்ளக்கூடியதே.

பிள்ளைகளுக்கு முதல் பாடம் போதிப்பது தாய்மார்களே. ஒடுக்கப்பட்ட ஸ்திரீகள் நிறைந்த ஒரு சமூகத்தில் சிரேஷ்டமான சந்தான உற்பத்தியை நாம் எதிர்பார்க்க முடியாது. ஆகவே ஸ்திரீகள் அபலைகள் என்ற எண்ணத்தை நாம் முதலில் விட்டுவிட வேண்டும். அவர்களுக்கு சம அந்தஸ்து சமூகத்தில் கொடுக்கப்படவேண்டும். இப்படி நான் சொல்லும்பொழுது ஒருவர் வேலையை மற்றவர் செய்யும்படி நான் யோசனை கூறுவதாக யாரும் அர்த்தம் செய்து கொள்ளக் கூடாது. ஸ்திரீ புருஷர்களுக்கென்று இயற்கையளித்துள்ள தனித்தனி சக்திகளை இன்று நாம் மாற்றி யமைக்கமுடியாது. அவை தவிற, வேறு வகையான பேத

பாவங்கள் அல்லது பிரதிகூலங்கள் ஏற்படுத்தப்படலாகாதென்பதே என் கருத்து.

சமூகத்தில் மலிந்துள்ள மூடப் பழக்க வழக்கங்களில் எந்தெந்த பழக்கங்கள் இயற்கைக்கு விரோதமாகவும், நியாயமற்றதாகவும் தோன்றுகிறதோ அவைகளைச் சமூக சீர்திருத்தத் தொண்டர்கள் அறவே அகற்றி, சமூகத்துக்கு ஏற்பட்டு வரும் அழிவைத் தடுக்க வேண்டும். கீழ்க்கண்ட கெட்ட பழக்கங்களைக் கண்டிப்பாக அகற்றியே தீர வேண்டும் :—

1. படுதா முறை ஒழியவேண்டும்.

2. ஸ்திரீகளுக்கு எல்லாவிதமான வெளி உலக சேவைகளில் ஈடுபட சம அந்தஸ்து கொடுக்கப்பட வேண்டும்.

3. பால்ய விவாகம் செய்யப்படுவது கண்டிப்பாக நிறுத்தப்படவேண்டும்.

4. விதவைகள் மறுமணம் செய்து கொள்வதற்கு ஆதரவளிக்கப்படவேண்டும்.

5. பல தாரங்களைக் கொள்ளும் வழக்கம் குறைக்கப்பட்டு, நாளடைவில் நிறுத்தப்பட வேண்டும்.

6. சமூகப் பழக்க வழக்கங்களிலும், சட்டங்களிலும் ஸ்திரீ புருஷர்களுக்கிடையே காணப்படும் வித்யாசங்களை அகற்றப் பிரயத்தனம் செய்யவேண்டும்.

7. பிள்ளைகளைப்போலவே பெண்களுக்கும் கல்வியறிவு கொடுக்க எல்லா வசதிகளும் செய்யப்பட வேண்டும். அவர்களுக்குச் சுதாவாகச் சம்பாதனை செய்து தங்களைத் தாங்களே சம்ரக்ஷித்துக் கொள்ளும் சக்தியை உண்டாக்கிக் கொடுக்க வேண்டும்.

8. ஸ்திரீகளுக்கு ஸ்திரீகளேதான் நன்றாக சேவை செய்ய முடியும். ஆகவே அவர்களுக்கு முக்கியமாக முதியோர் கல்வி, நூல் நூற்பது போன்றவை அத்யாவசியமானவையாகும். வாஸ்தவமாக நூற்கும் கலையே ஸ்திரீ ஜாதிக்கென்று தனியாக ஏற்பட்டதாகும். ஸ்திரீகள் மட்டும் திட்டப்படி நூற்று வருவார்களானால், நூற்புத் தொழிலைக் குடும்ப வருமானத்தின் ஒரு அம்சமாக்க முடியும்.

9. டாக்டர்களாகவும், தாதிகளாகவும் பழக்கப்பட்டு, அத்துறையில் சேவை செய்யப் பெண்கள் முன்வருவது நல்லது. அத்தொழில் அவர்களுக்கும், சமூகத்துக்கும் விசேஷ பலன் கொடுக்கும். பெண்கள் அத்துறையில் ஈடுபட நல்ல உற்சாகம் கொடுக்கப்பட வேண்டும். பெண்களுக்குக் கைத்தொழிலிலும் தக்க இடம் கொடுக்கப்பட வேண்டும்.

குறிப்பு :—இதர சீர்திருத்த வேலைகளைப் போலவே இப்பணியில் ஈடுபடும் தொண்டர்களுக்கும் முதலில் தங்கள் குடும்பத்திலேயே இச்சீர்திருத்தங்களை ஆரம்பிக்க வேண்டும். அப்பொழுது தான் அவர்கள் தங்களுடன் பழக வரும் மற்றவர்களைச் சீர்திருத்த யோக்யதாம்சம் கொண்டவர்கள் ஆகிறார்கள்.

(அகில பாரத சர்க்கா சங்கம், தமிழ் நாட்டுக் கிளையால் வெளியிடப்பட்ட சமூகத்தில் ஸ்திரீகளின் நிலைமை என்ற புஸ்தகத்திலிருந்து எடுக்கப்பட்டது.)

திருப்பதி மலைமீது

ரூபா 6 லக்ஷம் செலவில்



திருப்பதி மலையடிவாரத்திலிருந்து ஸ்ரீ வேங்கடேசப் பெருமாள் வரையில் செல்லும் ரஸ்தா இப்படத்தில் காண்கிறது. நடுவில் **கபில** ஆனந்தமான காட்சியாக விருக்கும்.

மலைமீதுள்ள ஸ்ரீநிவாஸப் பெருமாள் **சன்னதியும், அதைச் சுற்றி யுள்ள அழகிய குன்றுகளும்.**

போடப்பட்டுள்ள பஸ் ரஸ்தா

11½ மைல் போடப்பட்டது

சன்னதிக்குச் செல்லும் புதுமலை ரஸ்தா. ஆலிபிரியிலிருந்து காலிகோபுரம் தீர்த்தமும் (ஆழ்வார் தீர்த்தம்) அதில் விழும் அருவியும் கடக்கும்போது

மாலவணிகுண்டம் பாலம் :—திருப்பதி மலை ரஸ்தாவில் இதுவே பெரிய பாலம். இதைக் கட்ட ரூ. **40,000** செலவாயிற்று.

—பாரத தேவி

காலஞ்சென்ற, கும்பகோணம் அத்வைத ஸபா
பண்டிதராயிருந்த மஹாமஹோபாத்யாய, சாஸ்திர ரத்னகர, மஹோபதேசக,
பிரும்மஸ்ரீ - யக்ஞஸ்வாமி சாஸ்திரிகள் அவர்கள் இயற்றிய

ஸம்ஸ்கிருத கீர்த்தனை

[ய. மஹாலிங்க சாஸ்திரிகள், எம். ஏ., பி. எல்.]

கீர்த்தனை 3

அடாணு ராகம்] [ரூபக தாளம்

ஸாஹித்யம்

பல்லவி

தாரகரூப

அனுபல்லவி

தாபஸகுலோத்தாரக
ஸகலவிபுத தாரக
தாரகமுக மதஹாரக
நிகிலபுவன காரக

சரணம்

நவவீர ஸஹோதர,
நகராஜ நந்தினீ ப்ரியகுமார, குமார,
மாரஸம குமார,
புரஹர மனோவிஹார
ஸ்ரீயக்ஞேச் வரமாச்ரிதமனிசம் மாமவ

தாத்பர்யம்

நக்ஷத்ர ரூபமாய்ப் பிரகாசிப்பவனே, தவமுனிவர்களைக் கஷ்டங்களிலிருந்து விடுவிப்பவனே, எல்லா தேவர்களையும் காத்து ரக்ஷிப்பவனே, தாரகன் முதலிய அசுரர்களின் அட்டாஹஸத்தை ஒழிப்பவனே, எல்லா லோகங்களையும் ஏற்படுத்தியவனே, ஒன்பது வீரர்களுடன் பிறந்தவனே, பர்வத ராஜனின் பெண்ணான உமாதேவியின் அருமைப் புதல்வனே, குமாரக் கடவுளே, மன்மதன்போல வடிவழகுடையவனே, பரமசிவனின் ஹ்ருதயத்தில் விளையாடுபவனே, உன்னைச் சரண்புகும் ஸ்ரீ யக்ஞேச்வரனும் என்னை என்றும் காத்தருள்வாயாக.

பல்லவி

(1)	ஸா	தா	பம	பா	கம	பா
	தா	ஆ	ரக	ரூஉ	உஉ	பஅ
(2)	ஸப	தநி	பம	கமபம	கமபா	பா
	தஅ	அஅ	ரக	ரூஉஉ	உஉஉ	பஅ

(3)	தத	தத	பம		ஷெடி	
	தஅ	அஅ	ரக			
(4)	தநிஸ	தநிஸ	தாபம		ஷெடி	
	தஅஅ	அஅஅ	ஆரக			
(5)	தநி	ஸாரிஸ	நிப	தநி	ஷெடி	
	தஅ	ஆஅஅ	அஅ	அஅ		
				பம		
				ரக		
(6)	ஸாஅரி	ஸதாஅ	பம	கமபா	பா	ஆ
	தாஅஅ	அஆ	ரக	ருஉண	பஅ	அஅ

அனுபல்லவி

(1)	ரீ	ஸஸ	ஸ ஸ	ஸ்ஸ	தா	நிஸ்
	தா	பஸ	குலோத்	தா	ஆ	ரக
(2)	ஸ்ரிஸ்	ஸ்ரிஸ்	நிஸ்ா	ஸ்ா	ஸ்நிநித	நிஸ்
	ஸகல	விஇபுஉ	தஅ	தா	அஅஅஅ	ரக
(3)	கா	ரிஸ்	ஸரிஸநி	தநி	தா நி	ஸ்
	தா	ரக	முஉகஅ	மத	ஹா ர	க
(4)	ஸரி	ஸநி	ததத	தநிஸாநிப	தா	பம
	நிஇ	கில	புவன	கஅஆஅஅ	ஆ	ரக
	பஸ்	தா	பம	கமபம	கமபா	பா
	தஅ	ஆ	ரக	ருஉஉஉ	உஉண	பஅ

சரணம்

(1)	பப	மபதப	கக	கமபா	நிபாஅ	பப
	கவ	வீஇஇஇ	ரஸ	ஹோஒஒ	ஒஒஒ	தா
(2)	ஸரிஸநி	தததத		தத	தத	தத
	நஅகஅ	ரஅஅஜ		நந்	ந்ந்	தினீ
(3)	ஸ்ஸ்	(க)ரி	ஸ்ால்	ரிஸ்	தா	நிஸ
	ப்ரிய	கு	மார	கும	ஆ	அர
(4)	ஸ்ா	தா	தத	தத	தத	தத
	மா	ஆ	அர	ஸ°கு	மஅ	அர
(5)	பப	மாபத	பமகா	கமபா	ப	தநீஇ ப
	புர	ஹாஅ	மஅஅ	ஞோஒஒ	வி	ஹஆ ர
(6)	ஸ்ா	மாஅக்	ரிஸ்ஸா	ஸ்ரிஸ்நி	தா	நிஸ்
	ஸ்ரீ	யஅக்	ஞேளள	ச்வஅரஅ	மாச்	ரித
(7)	ஸரிஸநி	தாதா		தநிஸாநிப	தா	பம
	மஅணிஇ	சம்மா		அஅஆஅஅ	ஆ	மவ

ஸ்ரீ காமகோடி கோசஸ்தானத்தின் வெளியீடுகள்

ஒவ்வொரு புத்தகமும் பல படங்களுடனும் ஸ்ரீ ஆசார்யாளுடைய அனுக்ரஹ பூர்வமான ஸ்ரீ முகத்துடனும் கூடியது

ஸ்ரீமூக கவி பாடிய ஐந்நூறு சுலோகங்கள் கொண்ட

ஸ்ரீ மூக பஞ்சசதீ

ஸம்ஸ்க்ருத மூலமும் தமிழ் அனுவாதமும்

தமிழ் நாட்டிலெங்கும், "மூகனைக் கவி பாடுவித்த பெருமை வாய்ந்த ஸ்தலம்" என்று போற்றப்பெற்ற தான காம கோட்டத்து ஸ்ரீ காமாக்ஷியானவள், தன்னை எல்லோரும் பக்திபரவசராகிப் பாடிக்களித்துப் பேரின்ப மெய்துமாறு ஸ்ரீ மூக மஹாகவியைக்கொண்டு பாடுவித்தவையான ஆர்யா சதகம், பாதாரவிந்த சதகம், ஸ்துதி சதகம், கடாக்ஷ சதகம், மந்தஸ்மித சதகம் என்று பாகுபாடுபெற்ற ஐந்நூறு சுலோகங்களையும் தமிழிலே பொழிப்புரையோடும் அங்கங்கே பொருளை விளக்கு வதற்கான குறிப்புகளோடும் பதிப்பித்து ஸ்ரீ அம்பாளின் வடிவழகைக் காட்டும் மூவர்ணப் படங்கள் 'மூக கோட்டம்' என்று பிரஸித்திபெற்ற காமகோட்டத்துக் கோபுரங்கள் முதலியவற்றோடும் ஸ்ரீ காமகோடியின் கிருபையே வடிவெடுத்தாற் போல விளங்கும் ஜகத்குரு ஸ்ரீ ஆசார்ய பூஜ்ய பாதர்களின் படத்தோடும் அச்சிட்டு காமகோடி கோசஸ்தானத்துப் பதினெண்ருவது பிரசுரமாக வெளி வருகின்றது.

இதனை எல்லோரும் வாசித்துப் பேரானந்த மடைவார்களாக என்று ஸ்ரீ மூக கவியையும் அவரைக்கொண்டு தன்னைப் பாடுவித்துக் கொண்ட ஸ்ரீ காமாக்ஷி தேவி யையும், ஸ்ரீமத் ஆசார்யர்களை முன்னிட்டுக்கொண்டு, பிரார்த்தித்துக் கொள்ளப்படு கின்றது. 260 பக்கங்களுக்கு மேலுள்ள இப்புத்தகத்தின் விலை ரூ. 1 8 0.

1. ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரம் :—ஸ்ரீ சங்கர பகவத் பாதர்க ரூ. அ. ளருளிய பாஷ்யத்திற்குத் தமிழ் அனுவாதம் ஸ்ரீ வே. நாராயணன் எழுதியது. (2-ஆம் பதிப்பு) ... 1—4
2. ஸ்ரீ விஷ்ணு பாதாதி கேசாந்த ஸ்தோத்ரம் :—ஸ்ரீ சங்கர பகவத் பாதர்கள் இயற்றியது. ஸ்ரீ பண்டிட் ஏ. எம். ஸ்ரீநிவாஸாசார்யாரவர் களும் ஸ்ரீ வே. நாராயணன், எம்.ஏ., எம்.எல் அவர்களும் எழுதிய தமிழ் ஆங்கில அனுவாதங்களுடனும், பெடரல் கோர்ட் ஜட்ஜ் கனம் ஸர் எஸ். வரதாசாரி அவர்கள் முன்னுரையுடனும் கூடியது. ... 0—8
3. ஸ்ரீ பஜகோவிந்தம்:—ஸம்ஸ்க்ருத மூலமும் ஸ்ரீ ஏ. எஸ். நடராஜ ஐயர், பி. ஏ., எம். எல். எழுதிய தமிழ் அனுவாதமும். ... 0—2½
4. ஸ்ரீ சாந்தி விலாஸம் :—ஸ்ரீ நீலகண்ட தீக்ஷிதர் இயற்றிய ஸம்ஸ்க்ருத ஸ்தோத்திரமும் ஸ்ரீ Y. மகாலிங்க சாஸ்திரியார், எம். ஏ., பி. எல். எழுதிய தமிழ் அனுவாதமும் ; கனம் ஜட்ஜ் திவான்பகதூர் N. சந்த்ர சேகர அய்யர் அவகள் எழுதிய முன்னுரையுடன் கூடியது. ... 0—6
5. ஸ்ரீ ஸ்யாமளா தண்டகம் :—முதலிய ஐந்து தேவி ஸ்தோத்ரங்களின் ஸம்ஸ்க்ருத மூலமும் தமிழ் அனுவாதமும் ; ஸ்ரீ K. பாலசுப்ரமண்ய ஐயர், பி.ஏ., பி.எல். எழுதிய முன்னுரையுடன் ... 0—6
6. ஸ்ரீ ஸதாசிவ ப்ரஹ்மேந்த்ரர்கள் அருளிய சிவ மானஸிக பூஜா, கீர்த்தனங்கள், ஆத்ம வித்யா விலாஸ : என்னும் நூல்கள் : ஸ்ரீ வே. நாராயணன் எழு திய தமிழ் ஆங்கில அனுவாதங்களுடன் கூடியவை. (2-ஆம் பதிப்பு). 0—10
7. ஸ்ரீ ஆனந்த ஸாகரஸ்தவம் :—ஸ்ரீ நீலகண்ட தீக்ஷிதர் ... 0—10

ஸ்ரீ காமகோடி கோசஸ்தானம்

57, மேல டபீர் தெரு, கும்பகோணம்.	4, ப்ரான்ஸிஸ் ஜோஸப் தெரு, ஜார்ஜ் டவுன் சென்னை.

சூரிய மேடுகள்

[டி. பி. நவநீத கிருஷ்ணன், அண்ணாமலை நகர்]

சூரியனைச் சுற்றிலும், அதன் வரம்பினின்று, வெண்டணலாய்க் கொழுந்துவிட்டெரிந்து கொண்டுள்ள பெருஞ் சுவாலைகள் பல எழுகின்றன என, விஞ்ஞானிகள் கண்டுள்ளனர். அவ்வாறானவற்றினுக்கு, 'சூரிய மேடுகள்' (ஸோலார் ப்ராமினென்ஸெஸ்) எனப் பெயரிட்டுள்ளனர். அவை யுள்ளனவானவே யென்பதை தக்க கருவிகளைக்கொண்டு பார்ப்பதினாலேயே அறியலாம். அக்கருவிகளின் வழியே நோக்கும்போது, சூரியனது மேற்பரப்பின் வரம்பு சமனான வட்டமாய்த் தோன்றுது ; அதிலிருந்து கிளம்பினவாகி, படர்ந்தெரிகின்ற சுவாலைகள், மலையளவினவாய்க் காணப்படும். சூரியனது பிரகாசமே அதிகமானது; அதைப் பார்க்கவே கண் கூசுகின்றது. அப்படியுள்ளபோது, வெண்ணிற மயமான ஒளிப்பிழம்பினின்று வெளிக்கிளம்பியுள்ளனவான சுவாலைகளை நேரே கண்ணால் பார்க்கமுடியாது என்று கூறவே வேண்டியதில்லை.

அவ்வாறாயினுங்கூட, அச்சுவாலைகள் உள்ளனவென, பதினெட்டாம் நூற்றாண்டிலேயே, சிலர் அறிந்திருந்தனர். அவர், அவற்றைச் சூரிய கிரகணங்களின்போது கண்டனர். சூரியக் கிரகண சம்பவத்தை டெலெஸ்கோப்பைக் கொண்டு கவனித்துக் கொண்டிருந்த சிலர், கிரகண வேளையில் அச்சுவாலைகள் எழுந்துள்ளதைக் கண்டனர். கிரகண சமயத்தில் சந்திரனது சூரியனை மறைப்பதால் ஒளி மங்கலாகின்றது. அப்பொழுது சுவாலைகள் கட்புலனாகின்றன. சூரியக்கிரகண காட்சியை டெலெஸ்கோப் வழியே காணும்போது, வெண்ணிற வட்டம் போன்ற சூரிய பிம்பத்தின் மத்தியில், கருநிறமான வட்டத்தட்டொன்றுள்ளது போன்று, சந்திரனது நிழல் இருக்க வேண்டும். ஆனால் காணப்பட்டதான காட்சி, அவ்வாறானதாயில்லை. 'சந்திரனின் நிழல், எதிர்பார்த்தது போலவேயிருந்தது. சூரிய பிம்பமானது, பிரகாசமான ஒளியுடனுள்ள விளிம்பானது மட்டுமாயில்லை. அதன் வெளிப்புற வரம்பினின்று விளிம்பான ஒளியுடன் சேர்ந்தனவை போன்றிருந்த சுவாலைகள் எழுந்தன எனக் காணப்பட்டது. அச்சுவாலைகள் பல்வேறான உயரங்களானவையென எழும்பியிருந்தன. அவற்றின் பரப்புக்களும் வெவ்வேறான அளவினவாய் இருந்தன. அவை, சந்திரனின் நிழலினின்று கிளம்பியிருந்தவை போன்று காணப்பட்டன. கிரகணம் விட்டவுடன் அச்சுவாலைகள் காணப்படாதவையாயின. கிரகணம் விட்டவுடன் சந்திரனின் நிழலும் மறைந்துவிடுகின்றது ; அதாவது, சூரிய பிம்பமானது முழுமையிலும் காணப்படுகின்றது. எனவே, அச்சுவாலைகளை முதன்முதலாய்க் கண்ணுற்றவர், அவை சந்திரனுடன் தொடர்புற்றவையென எண்ணினர். அவரது கருத்து சரியானதொன்று அன்றி பிழையானதொன்று என அறிதற்காக மேலும் ஆராய்ச்சிகள் செய்யப்பட வேண்டும் என்ற நிலைமை ஏற்பட்டது. அவ்வாறு ஆராய்ச்சிகள் செய்தற்கென அடுத்ததான சூரிய கிரகணம் ஏற்படுகின்ற வரையில்காத்திருக்கவேண்டியதாயிற்று அதற்குள் பல்லாண்டுகள் சென்றன. சுவாலைகள் என்றவை சூரிய கிரகண காலத்தில் இருப்பவை என்ற ஒன்றைத் தவிர, அவற்றைப் பற்றின விஷயங்கள் வேறெவையும் அறியப்படவில்லை.

1860-ம் ஆண்டில், நேரிட்ட சூரியக் கிரகணத்தின்போது மிகுந்த கவனத்துடன் 'செய்யப்பட்டவையான ஆராய்ச்

சிகளினின்று கிரகண வேளையில் காணப்பட்ட பல பெருஞ் சுவாலைகள், சந்திரனுடன் எவ்வகையிலும் சேர்ந்தவையன்றுஎன நிச்சயமாயிற்று. அவை சூரிய பரப்பினின்று தோன்றியவையே என்பதும் தெருட்சியாயிற்று. அப்பொழுதே, அவை 'சூரிய மேடுகள்' என்று பெயரிடப்பட்டன. கிரகணம் விட்டவுடன், அவை காணப்படாதிருந்ததற்கான காரணம் என்னவெனவும் தெளிவாய் அறியப்பட்டது. கிரகண வேளையில் சூரியனது பெரும்பகுதி சந்திரனால் மறைக்கப்படுகின்றமையின் அது தருவதான ஒளியில் பெரும்பகுதி தடுக்கப்படுகின்றது. மறைக்கப்படாததான பகுதியினின்று வெளிப்பட்ட ஒளியானது, முழு ஒளியின் சிறு பகுதியானதேயாம். இவ்வாறாகவே, அதன் பிம்பத்திலும் ஏற்படுகின்றது. எனவே, கொழுந்துவிட்டெரிகின்றவை போன்றுள்ள சுவாலைகள் ஒளிமிக்கவையாய்க் காணப்படுகின்றன. கிரகணம் விட்டவுடன், சூரியனது ஒளி முழுவதுமானது வீசப்படுகின்றது. அப்பொழுது அதிகமான ஒளிக்குட்பட்டவையான சுவாலைகள் காணப்படாது மறைகின்றன.

பூர்ண சூரியக் கிரகணங்கள், அரிதாகவே நிகழ்கின்றன. கிரகண வேளையும் நீடித்ததொன்றன்று. எனவே, செய்யப்பட வேண்டுவனவான ஆராய்ச்சிகள் அக்குறைவான நேரத்திற்குள்ளாகவே, நடத்தப்பட வேண்டும். ஆதலின், சூரிய மேடுகளைப்பற்றி, செவ்வனே ஆராய்தற்கென, கிரகணமொன்றினை எதிர்பாராதவாறு இருத்தற்கும், நீண்ட பொழுதாயும் அம்மேடுகள் காணப்படுமாறு செய்தற்கும், ஆனவழிகளை விஞ்ஞானிகள் கண்டு பிடிக்க வேண்டியதாயிற்று. அவ்வாறான வழிகள், சூரிய ஒளியால் ஏற்பட்டதான மிகுதியைத் தக்கவாறு காணப்படாதிருக்கச் செய்து, அவ்வாறு குறைந்துள்ளதான ஒளியினிடையில், சூரிய மேடுகளின் சுவாலைகள் நன்கு காணப்படுமாறு செய்தற்கெனவானவையாயிருத்தல் வேண்டும் என ஏற்பட்டது. அவ்வகை வழியொன்று ஏற்பட்டதொன்றாயின், சூரிய மேடுகள் பாற்பட்ட ஆராய்ச்சிகள் ஓங்குமெனவும், அவ்வழியேற்படாவிடின், ஆராய்ச்சிகள் செய்யப்படுதல் தடைபட்டு விடுமெனவும், ஆனநிலைமை யேற்பட்டது.

அக்காலத்தே, விஞ்ஞானத்திற்கும் கைத்தொழிலுக்கும் நெருங்கிய ஒரு தொடர்பு தோன்றலாயிற்று. அவ்வகைத் தொடர்பு ஏற்பட்டமையின், விஞ்ஞானம் வளமுற்றது; தொழிற்கலைகளும் சிறப்புற்றன. விஞ்ஞானக் கருவிகளைச் செய்தமைப்பதற்கென்றான தொழின் முறைகளில், மேலான அபிவிருத்தி உண்டாயிற்று. விஞ்ஞானத்தைப் பயின்றவரான கைதேர்ந்த பாட்டாளிகள், ஆங்காங்கு எழுந்தனர். விஞ்ஞானீயமான தொழின் முறைகள் முன்னேற்ற மடைந்தன. அவ்வகையான முன்னேற்றத்தில், முதன்மையாய் நின்றது அமெரிக்க நாடு. அந்நாட்டினரான ஹேல் என்ற விஞ்ஞானப் பேரறிஞர், கைதேர்ந்தவரான தொழிலாளிகளின் துணையைப் பெற்றவராகி, ஸ்பெக்ட்ரோஹீலியோகிராப் என்ற அபூர்வமான கருவியைத் திறமையுடன் கட்டியமைத்தார். அக்கருவியானது, சூரிய ஒளியால் ஏற்பட்டதான ஜோதியைக் குறைந்துள்ளவாறுசெய்து, சூரியமேடுகள் மட்டும் நன்கு காணப்படுமாறு செய்கின்றதான தொன்றாம். எனவே, அக்கருவியின் மூலமாய், சூரியமேடுகளைப் பற்றின ஆராய்ச்சிகளை நன்முறையில் செய்தற்கெனவான வசதி ஏற்பட்டது. கிரகணமொன்று நேர்வதை எதிர்பாராதவாறாகி, வேண்டும் போதெல்லாம் சூரியமேடுகளைப்பற்றிய பரிசீலனைகளைப் பண்ணுவதற் கென்றான வழியொன்று பிறந்தது. ஸ்பெக்ட்ரோஹீலியோக்ராபைக் கொண்டு சூரிய பிம்பத்தின் பகுதிகள் பலவற்றையும், தனித்தனியாய், ஒரு நிற ஒளி (மானோக்ரோமாடிக்லைட்) படச்செய்து போட்டோ படம் பிடிக்கலாம். மேடுகளில்லாத சூரியப் பகுதிகளின்று வருகின்ற ஒளியானது விளைவிக்கின்ற நிற

மாலை யொன்றைவிடப் பன்மடங் கதிக மான பிரகாசத்துடனுள்ள நிறமாலையா னது, சூரிய மேடுகளினின்று வருகின்ற ஒளியால் பயக்கப்படுகின்றது. இவ்வகை யிலும், சூரிய மேடுகளுள்ளனவான பகுதிகள் எவையெனவும், அவை இல் லாத பகுதிகளானவை எவை எனவும் கண்டுபிடிக்கலாம். இவ்வாறான வகை களில் ஆராய்ச்சிகள் பலவற்றைச் செய் தவராகி, ஹேல் வெளியிட்டவையான விஷயங்களைப்பற்றி இனிச்சுருக்கமாய்க் கூறலாம்.

வெண்டணலான அச்சுவாலைகள், ஒரேயளவானவையன்று. அவை ஒவ் வொன்றும், அவ்வவற்றிற்கேனவான அளவுகளுடனும் இருப்பதில்லை. சில சமயங்களில் மேடொன்றானது, சிறிது சிறிதாய் மேல்நோக்கி வளர்கின்றது. பின், மெல்ல மெல்ல அது குன்றுகின் றது. மற்றும் சிலவான சமயங்களில், மேடொன்றானது, திடுகிடுவென்று மேல்நோக்கி உயர்கின்றது. இவ்வகை யில் செகண்டிற்கு இருநூற்றைம்பது மைல்கள் எனவான வேகத்துடன் உயர்ந்து சென்றதான மேடு, காணப் பட்டுள்ள தொன்றும். நான்கு லக்ஷம் மைல்களான உயரத்துடனிருந்த மேடு வொன்று காணப்பட்டது. (சூரியனின் குறுக்களவு எட்டு லக்ஷம் மைல்களான தாம்).

சூரியனிலுள்ள அடிப்பொருள்கள் (எலிமெண்ட்ஸ்) எல்லாம், மேடுகளில் இருப்பதில்லை. அவற்றில், முக்கிய மாய் நீரியமும் (ஹைட்ராஜனும்), நீறய மும் (கால்ஷியமும்) உள்ளவை. மேடு களின் மேற்படலங்களில், ஹைட்ராஜன் மட்டுமே யுள்ளது. கீழே செல்லச் செல்ல, ஹைட்ராஜனின் அளவு குறைந்து கொண்டே போகின்றது. கால்ஷியத் தின் அளவு அதிகரித்துக்கொண்டே வருகின்றது. சூரியப் பரப்பிற்கு அடுத்துள்ளனவான படலங்களில், கால் ஷியம் மட்டுமே யுள்ளது. கால்ஷிய மானது, மேடுகளின் தளங்களில் மட் டுமேயன்றி, அவற்றைச் சுற்றிலும், வெகுதூரம் வரையுங்கூட, படர்ந் துள்ளது. அவ்வாறு அது பாளம் பாளமாய்ப் பரவியுள்ளது. அவ்வாறான பாளங்கள், மிகவும் மெல்லிய நூலிழை கள் பல அடுக்கப்பட்டுள்ளதைப் போன்றனவையாய்க் காணப்படுகின் றன. எனவே, அவை 'சாபரத்துத் துய்கள்' (ப்ளாக்யுலி) எனப்படு கின்றன.

சூரிய மேடுகள் பாற்பட்டனவான ஆராய்ச்சிகளைப் பற்றிக் கருதுங்கால், ஒரு விஷயம் தெளிவாகின்றன. அது நுட்பங் காண்கின்றனவான கருவிகள் கட்டப்படல் என்பது விஞ்ஞான முன் னேற்றத்திற்கான காரணங்களில் முக் கியமானதொன்றும் என்பதே.

"மகாத்மா காந்தி உயிருள்ள பொழுதே இந்தியா சுதந்திரமடைய வேண்டும். அதுவே எனது அபிலாஷை."

—சத்தியமூர்த்தி.

சாந்தி

[சூர்யதாஸன்]

(சென்ற மாதத் தொடர்ச்சி)

சுந்தரியைத் தொந்தரவு செய்தார் அருணாசலம் அய்யர். அதை அவள் வட்டியுடன் வாங்கினாள் அருணாவிடம். ஆறுமாத காலமாய்க் குமாரின் பேச்சு மூச்சையே காணோம். இருக்குமிடங் கூடத் தெரியவில்லை. ப்ரேம் குமாரின் அக்ஷராப்யாஸங் கூட நடக்கவில்லை. குமாரில்லாமல் அருணாவிற்குக் கொண் டாட்டமேது. உச்சிஷ்ட அவமானம் முதலியாரை வேதனைப்படுத்திக்கொண் டிருந்தது. பலமாய் போதனை செய்தார். வீடும், நிலமும் 25 ஆயிரம் பெறும் என்று ஆவல் காட்டினார். ஏன் இதோடு பேவானேன். அய்யரின் இஷ்டத்திற்கு உட்பட்டால் எதுதான் கிடைக்காது என்று குபேரப் பட்டணத்தைக் காட் டினார் முனிசாமி முதலியார். இந்தச் ஜடாமுனியின் உபத்திரவம் அருணா வால் தாங்க முடியவில்லை. பொறுமை யிழந்தாள்.

"மற்றவர்போல் மானங்கெட்ட குச்சுக்காரி நானில்லை"

பளீர் என்று விழுந்தது அருணா வின் கன்னத்தில் அறை ஒன்று. சுந்தரி யின் கை விசேஷம், அப்படியே தழும்பு பதிந்துவிட்டது, சுந்தரியின் கை, கரி யாகப்போக என்று சபித்தேன்.

சுந்தரி ஏதேதோ செய்து பார்த் தாள். அருணாவின் மானத்தை வாங்கி னால்தான், தன் ஜன்மம் ஸாபல்யமாகும் என்று எண்ணினாள்போல் இருந்தது அவள் செய்த காரியங்கள். துணிக் கடைக்கு அருணாவை அழைத்துச் செல்வாள் சுந்தரி. கடையிலுள்ள புட வைகளையெல்லாம் பிரித்துப் போடு வார் அருணாசலம் அய்யர். நகைக்கடை க்குச் சென்றால் அங்கும் அய்யர் இருப் பார். சுந்தரி இருக்கும்போது அவருக் குத் தெரியாதது என்ன? நகைகளெல் லாம் அருணாவின் காலடியில் கொட்டு வார் அய்யர். கனகாபிஷேகம் செய்தால் என்ன? கற்பக தருவே வந்தால்தான் என்ன? அருணா அசைவாளா? சிறு பெண் துணியில் தயங்குவாள். நகை யில் நிலை தவறுவாள் என்று எண்ணிய அய்யர் ஏமாந்தார். அருணாவின் மன மாகிய மலையைக் கல்லும் சிறு எலியாய் விளங்கினாள் சுந்தரி. இன்னம் அவள் செய்ததை எல்லாம் நினைத்தால்கூட என் மனம் நடுங்குகிறது. ஆனால் அவள் பாச்சா ஒன்றும் அருணாவிடம் பலிக்கவில்லை. குமாரைப்பற்றி வதந்தி கள் பரவின. முதலியார் இருக்கும் பொழுது, வதந்திகள் உற்பத்தியாவதில் குறை ஏது? "குடித்துவிட்டுக் குமார் நடுத்தெருவில் புரண்டான். கேடுகெட் டவளை இழுத்துக்கொண்டு ஓடிவிட் டான். கடன்காரர் ஜயிலில் குடியிருக் கிறான். இந்த மாதிரி எல்லாம் பேச்சு நடக்கும். சுந்தரி அந்தக் கூட்டத்திற் குத் தலைமை வகிப்பாள். ஸாம தான பேதமும் அருணாவிடம் தோல்வியுற் றன. கடைசியான தண்ட முறையை யும் கையாண்டாள் சுந்தரி.

அருணா பட்டபாட்டை ஆண்டவன் தான் அறிவார். ஏன் நானும் தான் அறிவேன். அவள் ஒரு தரம் என் னிடம் வந்தால் பிறகு நான் அறியா தது அவள் உள்ளத்தில் ஏது? அசை யாமல் பதுமைபோல் அவள் உட்கார்ந் தால், அவள் உள்ள வெழுச்சி என்னை முழுக்கி விடாதா? பெண்ணொருத்தி யின் மனம் படும்பாடு.

"செல்வம் எதையும் செய்து விடுமா? ஏன் இந்தப் புத்தி? மானம் என்பது ஒரு வியாபாரப் பொருளா?

கடையில் கிடைக்குமா? இதை ஏன் ஆடவர் அறியவில்லை?"

என்ன இருந்தாலும் சிறு பெண் தானே அருணா. இல்லாவிட்டால் இது அவள் மனதில் உதிக்குமா? மானம் சிறிது, வாழ்வே பெரிது என்று எண்ணும் மானிடரும் இருக்கிறார்களே!

"வாழ்வா பெரிது? மானம் போனால் வாழ்வு ஏன்? மானத்தை ஏன் தாழ்வாக்குகிறார் ஆடவர். அதை வாங்குவதில் அவர்களுக்கு என்ன பெருமை? அணா பைஸாவில் கணக்குப் பார்க்க ஏன் ஆசைப்படுகிறார்கள்? பெண்ணைப் பிடித்து ஏன் பித்தராகிறார்கள்?"

பெண்ணைப் பற்றிப் பெண்ணொருத்திக்கு என்ன தெரியும்? மதிராக்ஷியை மதிராக்ஷி அறிவாளா? பெண்ணின் கண்ணில் மது. அதைக் குடித்து மதியிழக்கிறான் புருஷன். மதுவை வைத்திருப்பவளுக்கு மதிமயக்கமேது? குடிப்பவனுக்குத்தானே.

"ராமனில்லையா. சீதையைத் தவிர வேறு பெண்ணைப் பார்த்திருப்பாரா? அவரை ஏன் ஆடவர் பின்பற்றவில்லை? பெண் என்றால் அலக்ஷியம். அதுவும் தாசிப் பெண் என்றால் அற்பம். ஒரு போக வஸ்து. காமப் புழுதியில் இழுத்து அழுக்காக்க ஆண்களுக்கு உபயோகமாகும் ஒரு விளையாட்டுக் கருவி பெண்களின் புனிதவுடல். பிறர் மனைவி என்றால் இந்த விளையாட்டில் குதூகலமதிகம். ஏன் இது? ஆடவர் மனம் கல்லா? கருங்கல்லா? தாய், தங்கை, மனைவி மக்கள் என்ற சுற்றத்தை மறந்த மனம் மடித்த மரக்கட்டையா? அப்பா, இதற்கு விமோசனம் ஒன்றும் இல்லையா?"

இப்படி ஏங்கும் பெண்ணைக் கண்டு பேயும் இரங்கும். எதுவும் இரங்கும். பரிதவிக்கும் அருணாவின் முகத்தைப் பார்த்துப் பார்த்து அந்த முகம் அப்படியே என் உள்ளத்தில் பதிந்துவிட்டது. ஆனால் சுந்தரியின் மனம் இரங்கவே இல்லை. பெண்ணைப் பார்த்துப் பெண் இரங்குவாளா? பேய்தான் இரங்கும் என்றார்கள்.

"அம்மா, என்ன சொன்னாலும், நான் கேட்கமாட்டேன். எனக்கு மானம்தான் பெரிது."

பயமில்லாது பேசினாள் அருணா ஒரு நாள். துக்கம் அதிகரித்துத் தைரியத்தைக் கொடுத்தது.

"பிச்சைக்காரன் பெண்டாட்டிக்கு மானம் வேறா?"

பணமென்றால் பிணமும் வாய் திறக்குமென்றால் சுந்தரியின் வாய் ஏன் திறக்காது? வாய் திறந்தாள். கண் மூடினாள். அருணாவின் மானம் அவளுக்குத் தெரியவில்லை. தெரிந்திருந்தால் இப்படிப் பேசுவாளா?

"பிச்சைக்காரிக்கும் மானம் உண்டு. மானத்தை இழப்பதைவிடப் பாழுங்கிணற்றில் விழுந்து உயிர் விடுவாள் கதியற்ற பிச்சைக்காரிகூட"

நான் திடுக்கிட்டேன். என் உடல் நடுங்கிற்று. கவலையுடன் பார்த்தேன். சுந்தரி கவலையற்று இருந்தாள்.

"எனக்கு உதவாத பெண் இருந்து என்ன இறந்து என்ன? வேண்டுமானால் உன்னைக் கிணற்றில் தள்ளுகிறேன் வருகிறாயா"

என் மூளை சுழன்றது. உடல் தள்ளாடியது. "அம்மா, இது நிஜந்தானா. என்னைப் பிணமாய்ப் பார்க்க உனக்கு இஷ்டந்தானா?"

"ஆஹா, இஷ்டந்தான். ஆனால் வீணாகப் பிணமாவதைவிட என் இஷ்டத்தை நிறைவேற்றி விட்டுப் பிணமாகலாம்"

சுந்தரீ, சுந்தரி, உன்னைக் கடவுள் ஏன் படைத்தார்? அதுவும் ஒரு பெண்ணாய். சக்திமட்டுமிருந்தால் நான் என்ன செய்திருப்பேன்? பெண்ணென்றுகூட எண்ணியிருக்கமாட்டேன்.

"சரி அம்மா. அப்படியே செய்கிறேன். உன் மனம் திருப்தி

ஆகட்டும். இரவு பத்து மணிக்கு அய்யரை வரச்சொல்லு. உன் இஷ்ட மெல்லாம் நிறைவேறிவிடும். ஆனால் வாங்குவதை எல்லாம் முன்னாலேயே வாங்கிவிடு. ஏமாந்துவிடாதே.''

இது என்ன பேச்சு? என் அருணா வின் வாயிலிருந்தா, அதுவும் சிரித்துக் கொண்டா? கடவுளே, நினைக்கக்கூட முடியவில்லையே! அருணாகூட மனம் மாறிவிட்டாளா? சுந்தரிகுதூஹலமாய்ச் செல்கிறாளா? அருணாவின் மனம் மாறித்தான் இருக்கவேண்டும். துன்பம் பொறுக்காது மனம் மடிந்திருக்கவேண் டும். அழுதழுது ஈரமற்றிருக்கவேண் டும். "பாவம் பேதைப்பெண். ஏழை யழுத கண்ணீர் கூரியவாள். அது வீண் போகாது. சுந்தரி அனுபவிப் பாள்.

இரவு மணி ஒன்பது. சந்திரன் பகல்போல் காய்ந்தான். மணப்பெண் போல் அலங்காரமாய் வந்தாள் அருணா. தூங்கும் ப்ரேம்குமாரை அவள் மார்பு ஏந்தியிருந்தது. அவள் முகம் சாந்தி யால் ஜ்வலித்தது. சந்திரனின் ஒளி குன்றியது. அருணாவின் அழகுக்கிர ணம் அதை மங்கவைத்ததா? அருணா வின் அழகுடன் தனக்குப் போட்டி யிடச் சக்தி இல்லை என்று பயந்தா இல்லை. அருணாவைக் கண்டு பொறாமை கொண்ட சந்திரனின் திருஷ்டிதோஷம் படக்கூடாதென்றே மேகங்கள் சந் திரனை மறைத்தன. அவ்வளவு அழ காக இருந்தாள் அருணா.

"சாந்தி அப்பா, கடைசியாகச் சாந்தி. எல்லாவற்றிற்கும் சாந்தி இதுதான் வழி; வேறு வழியில்லை. அம்மாவின் மனம்திருப்தி அடைந்து விட்டது. பணம் கிடைத்துவிட் டது. என் பிணமும் கிடைக்கட்டும். மனம் முழுதும் மகிழட்டும்.''

எங்கும் அமைதி, சாந்தி பொங்கும் அமைதியல்ல, துன்பம் தரும் அமைதி. திடீரென்று சந்திரன் பிரகாசித்தான். அவன் களங்கம் தன் முகத்தில் விழக் கூடாது என்பதுபோல் தலை குனிந்து என்னைப் பார்த்தாள் அருணா. அவள் கண்கள் பொழிந்த கண்ணீர் மழை என்னைச் சுட்டுத் தகித்தது. ஏழை அழுத கண்ணீர் கூரியவாள் மாத்திர மல்ல. சுட்டெரிக்கும் தீச்சுடர்.

"எனக்கு வேறு கதி இல்லை. உன் னைச் சரண் அடைகிறேன். என் அருமை மகனுடன், நீதான் என்னை ஆட்கொள்ள வேண்டும். அம்மா தேடிவந்தால் எங்கள் உயிரற்ற உட லைக் கொடுத்துவிடு. கடைசி வரை அவரையே தியானித்து மறு பிறப் பிலும் அவரையே கணவராக அடை யக் கடவுளை வேண்டினேன் என்று மறக்காமல் மாப்பிள்ளையிடம் சொல்லு. மறக்காமல் இந்த உதவி செய்''

அருணா கெஞ்சினால், அதுவும் வேறு வழி ஒன்றும் இல்லாதபோது, நான் தயங்குவேனா. மார்புடன் ப்ரேம் குமாரை அணைந்து என்னைப் பார்த் தாள்.

"குமார்''

அருணாவின் ஆனந்தக் குரல், மற்ற ஒலிகளை எல்லாம், கேட்காதபடி செய் தது. எப்படி என்னிடம் வந்தார்கள் என்று தெரியவே இல்லை. அவர்களை என் கைகளால் இறுக அணைத்து உலக நினைவையே மறக்கச் செய்தேன்.

9¾ மணி இருக்கும். திடீரென்று குமார் வந்தான். ஆவலுடன் 'அருணா' என்று கூப்பிட்டுக்கொண்டே, வழக்கம் போல் தடதடவென்று மாடிக்குச் சென் றான். சுந்தரிக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. கையைப் பிசைந் தாள். எங்கேயோ தொலைந்திருந்தவன் ஏன் வந்தான்? அதுவும் எல்லா நாட்க ளையும் விட்டு இன்று வர வேண்டும்? வெண்ணெய் திரளும் சமயத்தில் தாழி யை உடைக்கவா வரவேண்டும்? என்ன நேருமோ என்று சுந்தரி தவித்தாள்.

மாடி ஹாலில் தடபுடலாய்ப் பத்தி ரிகை படித்துக்கொண்டிருந்தார் அருணா சலம் அய்யர். அருணா வருகிறாள் என்று ஆவலுடன் பார்த்தார். இனிறு வெட்டப் பூதம் புறப்பட்டது.

குமார் வந்தான். துள்ளி எழுந்தார் அய்யர்.

"ஏது ஸ்வாமிகளே, அபூர்வமாக இருக்கிறது. என்ன விசேஷம்?"

குஷியாகத்தான் பேசினான் குமார். ஆனால் அய்யருக்குக் குளிர் காச்சல். ஜன்னிகொண்டவர்போல் நின்றுகொண்டிருந்தார்.

"ஒன்றுமில்லை. உங்களைத்தான் பார்க்க வந்தேன்."

திக்கித் திணறியது அய்யரின் குரல்.

"அடாடா, இவ்வளவு நாளாகத் தெரியாதே. அய்யர்வாளுக்கு ஜோஸ்யங் கூடத் தெரியுமா? இல்லாவிட்டால் நான் வரப்போவது எப்படித் தெரியும்? இதோ வந்துவிட்டேன். சற்று மன்னியுங்கள்."

சட்டையைக் கழற்றி வைக்கப் படுக்கை அறைக்குள் சென்றான் குமார். அய்யர் நழுவப் பார்த்தார். சோழன் ப்ரும்மஹத்திபோல் வழியில் சுந்தரி நின்று கொண்டிருந்தாள். ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தார்கள். பிணக்களை யார் முகத்தில் அதிகம் என்று பரீக்ஷை செய்வதுபோல் இருந்தது அவர்கள் பார்வை.

"அருணா"

படுக்கை அறையிலிருந்து குமாரின் அலறல். துள்ளி விழுந்தார்கள் சுந்தரியும் அய்யரும். பேய் பிடித்தவன் போல் ஓடினான் குமார், அவர்களைக் கவனியாமல். ஏன் என்று தெரியாமல் அவர்களும் அவன் பின்னால் வந்தார்கள். குமாரைக் கண்டு திடுக்கிட்டேன். பேசாமல் அவன் சொத்தை அவனிடம் கொடுத்தேன்; அருணாவை வாரி எடுத்தான். ப்ரேம்குமாரை அணைந்திருந்தன அவள் உயிரற்ற கைகள். குமார் தடுமாறினான். அதுவரைதான் அவன் வெறி அவனுக்குப் பலம் தந்தது. இதற்குள் என்னைச் சுற்றி ஏகக்கூட்டம். முன் நாள் போல ஆண் பெண் அடங்கலும் இருந்தது. "பாவி, த்ரோஹி" என்று என்னை வைதபடியே குமாருக்கு உதவி செய்தது கூட்டம்.

வெளியே வந்தான் குமார். தன் உயிரைப்போல் அருணாவைப்பசுந்தரையில் விடுத்தான். சிறு குழந்தை தூங்குவதுபோல் மீளாத் தூக்கத்தில் ஆழ்ந்திருந்தாள் அருணா. குழந்தை 'ப்ரேமை' அவள் அணைப்பிலிருந்து விடுவித்து அவள் பக்கத்தில் படுக்க வைத்தான் தூங்கும் குழந்தையை எழுப்பாது படுக்க வைப்பதுபோல். கண்ணீர் விடாதவரே கிடையாது. எங்கும் அமைதி. சமாதானம் பொங்கும் அமைதி. ஆறுதல் அளிக்கும் அமைதி.

திரும்பிப் பார்த்தான் குமார், உயிரற்றவர்போல் சுந்தரியும் அய்யரும் நின்றனர். யாருக்கு உயிரில்லை, அவர்களுக்கா அல்லது தரையில், தூங்குபவர் போலிருப்பவர்களுக்கா என்ற சந்தேகம் ஏற்பட்டது.

"அய்யர்வாள், திருப்தியாயிற்று, ஆசை பூர்த்தியாகிற்று, விருதம் நிறைவேறிற்று, சந்தோஷம்தானே? தாஸியின் ஸேவையை ஏற்றுச் சந்தோஷம் கொண்டீரா? இந்தாருங்கள் இதைப் படியுங்கள். எல்லோரும் கேட்கட்டும்"

ஜலத்தில் நனைந்த கடிதத்தை நீட்டினான் குமார். அவனுக்கு அருணா எழுதிப் படுக்கையறையில் வைத்திருந்த கடிதம். குமாரை அலறச் செய்த கடிதம். கடிதத்தை வாங்கிப் பொம்மைபோல் நின்றார் அய்யர். யந்திரம்போல் படித்தார்.

"என் ப்ரியமுள்ள குமார்,

முன் செய்த புண்ணிய வசத்தால் உங்களைக் கணவராக அடைந்தேன். என்னைப்போல் பாக்கியவதி இல்லை என்றும் எண்ணினேன். யார் செய்த பாவமோ அதன் அவதாரமாய் அய்யர் வந்தார். பணத்தாசையில் மயங்கினாள் என் தாய். பிணத்தாசையும் கொண்டாள். மானத்துடன் அவள் ஆசையை நிறைவேற்றுகிறேன்.

குமார்,...குமார், என்னை மன்னியுங்கள். உங்களை விட்டுப் பிரிகிறேன்

அடிக்க விட்டு ஓடுகிறேன். கோழைபோல் அல்ல. உங்களைவிட்டுப் பிரிய மனத்திடமிருந்தால் நான் கோழையா? தைரியமாகப் போகிறேன். கடமையைச் செய்யச் செல்கிறேன்.

பெண் இனம் கதிமோக்ஷம் பெற, எங்கள் வகுப்பு விடுதலை அடைய, மங்கையர் மானம் மதிப்புற, ஆடவர் மனம்மாற, சமூகம் மனத்திடங்கொள்ள, நான் பலியாகிறேன். உயிரிலும் உயர்ந்தது மானம், செல்வத்திலும் சிறந்தது மானம், நங்கையரின் நகை மானம், இதை உலகு அறிய மதித்துப் போற்ற நான் உயிர் விடுகிறேன். இதை ஏற்று ஆடவர் மனம் இரங்காதா?

குமார், ஆசைக் குமார். இனி உங்களை இப்படி எப்பொழுது கூப்பிடுவேன்? உங்கள் அன்பு மொழிகளை எப்பொழுது கேட்பேன்? ஆசை முகத்தை எச்சமயம் காண்பேன்? சீச்சி, என்னவிது, பேதை மனங் கலங்குகிறது. குமார், அடுத்த பிறப்பிலும் உங்கள் மனைவியாக, இல்லை, தாவியாக வரும் பாக்கியம் எனக்குக் கிடைக்கும்படி ஆசீர்வாதம் செய்யுங்கள். இதுதான் என் கடைசிக் கோரிக்கை.

உங்கள் பெயரையே தியானிக்கும்

உங்கள் அருமை

அருணா.

அப்பாவை விட்டால் வேறு கதி இல்லை. அவரைச் சரண் அடைகிறேன். அவரை வையாதீர்கள். என் போன்ற நிலைமையிலுள்ளவர்களுக்கு அவர்தான் கதி.

குமாரி அருணா."

அய்யர் படித்து முடித்தார். அவரை வையாதவர் கிடையாது. சுந்தரியைத் தூற்றுதவர் இல்லை. ஆண்கள் சார்பில் அருணாவை நமஸ்கரித்து மன்னிப்புப் பெற்றுச் சென்றார் அய்யர். சுந்தரி இன்னமும் பதுமைபோல் நின்றாள்.

"அம்மா, உங்கள் மனம் முழுதும் த்ருப்தியாகட்டும். இந்தாருங்கள்."

ஒரு கட்டு நோட்டைச் சுந்தரியின் காலடியில் போட்டான் குமார். எல்லாம் ஆயிர ரூபாய் நோட்டுகள். 50 அல்லது 60 இருக்கும். கூட்டம் பெருமூச்சுவிட்டது.

அருணாவின் பக்கத்தில் மண்டியிட்டான் குமார். அவளை எடுத்து மார்புடன் அணைத்தான். "அருணா" என்று அவன் வாய் அன்புடன் அழைத்தது. அமைதியுடனிருக்கும் அவள் ஹ்ருதயத்தைத் தன் ஹ்ருதய சப்தத்தால் கலைக்க எண்ணியதுபோல் இறுக்கி அணைந்தான். அமைதி சாதாரணமானதா? வெற்றிகொண்டது சாந்தி. ஹ்ருதயமும் ஹ்ருதயமும் கலந்தது. சாந்தி பெற்ற ஹ்ருதயத்துடன் கலங்கிய ஹ்ருதயம் சேர்ந்தது. அருணாவை அணைந்தபடியே விழுந்தான் குமார். அவனைத் தூக்கினர் சிலர். நிற்க வைப்பதற்குப் பதிலாக அருணாவின் பக்கத்தில் அவனையும் படுக்க வைத்தனர். ஏன் எல்லாம் கலப்புத்தான். அருணாவின் ஹ்ருதயத்துடன் குமாரின் ஹ்ருதயமும் சப்தமின்றிக் கலந்துவிட்டது. இருவர் ஆவிகளும் அத்வைதமாகின.

இதை எல்லாம் கண்டு, அனுபவித்த பிறகும் உயிருடன் இருக்கும் நான் யார்? மனிதனா, மிருகமா? இல்லை பேயா, பிசாசா என்றுதானே யோசிக்கிறீர்கள்? என்ன முடிவு செய்தீர்கள்? ஆமாம். உங்கள் முடிவு சரிதான். நான் ஒரு கிணறு தான். இல்லாவிட்டால் என்னைப் பாழுங்கிணறு என்று எப்படி வைய முடியும்.

பாவி, படுபாவி, என் முகத்தில் விழிக்கவும் கூடாது, சூரியகிரணம்கூட என்னை எட்டக்கூடாதென்று எனக்குப் பலகை அடைப்புப் போட்டுவிட்டார்கள். புதர்கள் சூழ இப்பொழுது வாழ்கிறேன். ஆனால் சாந்தியுடன் வாழ்கிறேன். அருணோதயம். ஆமாம். சாந்தியில்தான் அருணோதயம்.

முற்றிற்று

ஸ்ரீ சத்தியமூர்த்தியின் திறமை

"காங்கிரஸின் சார்பாக ஸ்ரீ சத்தியமூர்த்தி ஒருவர் மாத்திரம் சட்டசபைக்குப் போனால் போதுமானது."

—மகாத்மா காந்தி.

கொலைகாரன்!

["ஜெமன்"]

வேலூர் மத்திய சிறையின் 53-வது அறையை சிறைக்காவலன் திறந்தான். அங்கே ஒரு மூலையில் சுவரில் கிழித்திருந்த கோடுகளை விரல் விட்டு எண்ணிக் கொண்டிருந்த கைதி நம்பர் 79, திடுக்கிட்டுத் திரும்பினான். சிறைக்காவலன் அவனைப் பார்த்து "இன்று உனக்கு விடுதலை. அதிகாரிகள் முன்பாக நீ ஆஜராக வேண்டும்" என்று கூறிவிட்டு அறையின் இருகதவுகளையும் அகலத்திறந்து வைத்தான். சிறைக் காவலன் கூறியது அவன் காதில் சரியாக விழவில்லைபோலும். ஏனென்றால் அவனுடைய விரல்கள் மறுபடியும் சுவரில் கிழித்திருந்த கோடுகளை எண்ணிக் கொண்டிருந்தன. பத்தொன்பது தரம் விரல்கள் மடிந்தன. ஒரு பெருமூச்சு கனமாக அவன் இருதயத்திலிருந்து கிளம்பியது.

"79, உன்னை அதிகாரிகள் கூப்பிடுகிறார்கள்" என மறுபடியும் சிறைக்காவலன் கத்தினான். இதுவும் அவன் காதில் விழவில்லை. அவன் மறுபடியும் விரல் விட்டு எண்ண ஆரம்பித்தான். சிறைக் காவலன் அவனருகில் சென்று உரக்க "அதிகாரிகள் உன்னைக் கூப்பிடுகிறார்கள்" என்று கர்ஜித்தான். அவன் கூறியது தன் காதில் விழுந்துவிட்டது என்பதற்கு அடையாளமாகக் கைதி தலையை ஆட்டி, விலங்கிடப்பட்டிருந்த கைகளுடன் எழுந்து நடந்து சென்றான்.

சிறைக்காரியாலய அறையில் அதிகாரிகள் உட்கார்ந்திருந்தனர். அவர்கள் முன்பாக கைதி நம்பர் 79 தலைகுனிந்து கொண்டு நின்றான். அவனைப் பார்த்ததும் அதிகாரிகளில் ஒருவர் "இன்று நீ விடுதலை பெற்றாய். இதுவரை நீ செய்த வேலைக்கு 50 ரூபா கூலி கொடுக்கப்படும்" என்று கூறினர். அவனுடைய கை விலங்குகளும் கழட்டப்பட்டன. கைகளுக்கு விடுதலை! இருபது வருஷங்களாக இரும்புக் காப்பினால் பிணைக்கப்பட்டிருந்த கைகள் விடுதலையடைந்தன! விலங்கு சென்றதா என்பதைக் கைகளை அகல வீசி ஊர்ஜிதப் படுத்திக் கொண்டான்.

சிறைக்கு வெகுதூரம் பட்டாஸ் வெடிக்கும் சப்தம் கேட்டதும் அவன் சுவரில் ஒரு கோடு கிழிப்பான். அந்நாள் தீபாவளிக்கு முந்நாள் அல்லது மறு நாளாக இருக்கலாம். ஆனால் அக்கோடு அவனுக்கு ஒரு வருஷகால அளவைக் காட்டும். இவ்விதமாகப் பத்தொன்பது தீபாவளிகளும் சென்றன; சுவரில் பத்தொன்பது கோடுகளும் கிழித்தான். ஒரு கோடுதான் பாக்கி, உடனே விடுதலை! இதை நினைக்கும்பொழுதெல்லாம் அவனுக்கு மயிர் சிலிர்க்கும்.

கைதி நம்பர் 79 சிறைக்கு வெளியே வந்தான். சிலுசிலுவென்ற குளிர்ந்த காற்று அவன்மேல் பட்டதும் வெளுத்த நரம்புகளெல்லாம் சிறிது கறுத்தன. அவன் திரும்பி சிறைச்சாலையை ஒருமுறை நோக்கினான். ஒரு பெருமூச்சு. பிறகு அவன் வெகு வேகமாக பிறர் கண்களில் படாமல் நிழலில் பதுங்கிப் பதுங்கி நடந்து சென்றான்.

2

"சடக், சடக், சடக் - கட, கட, கட" சென்னைக்கு வரும் பாசெஞ்சர் வண்டி ஒரு பாலத்தில் ஓடிக்கொண்டிருந்தது. மூன்றாவது வகுப்பில் இருளடைந்த ஒரு மூலையில் கைதி நம்பர் 79 சாய்ந்து கொண்டு வெளியே நோக்கிக் கொண்டிருந்தான். ஆற்றில் சுழலுடன் வெள்ளம் கரைபுரண்டோடியது.

அன்று, இருபது வருஷங்களுக்கு முன்பு இதே பாலத்தைக் கடக்கும் பொழுது இவ்வாற்றில் குதித்து தன்

னுடைய விடுதலையைப் பெற முயற்சித்ததுண்டு. ஆனால் அப்பொழுதோ யமகிங்கிரர்களைப்போல இரு போலீஸ் வீரர்கள் அவனைக் காவல் காத்துக் கொண்டிருந்தனர்.

மறுபடியும் ஆற்றில் தோன்றி மறையும் சுழல்களைக் கவனித்தான். பழைய சம்பவங்களெல்லாம் கனவுபோல அவனது மனத்திரையில் தோன்றின.

3

சென்னை ஹைகோர்ட்டில் கைதிக் கூண்டொன்றில் நின்றுகொண்டிருக்கிறான். இருபக்கத்திலும் துப்பாக்கி ஏந்திய போலீஸ் வீரர்கள் விரைப்புடன் நிற்கின்றனர். அன்று பாங்கர் ஜீவன்லால் சேட் கொலை கேஸில் நீதிபதி முடிவு கூறப்போகிறார். கூண்டில் நின்றுகொண்டிருந்த கந்தசாமி தனது வாக்குமூலத்தைக் கொடுக்கிறான்.

"நான் ஒரு விறகு வெட்டி. சிந்தாதிரிப்பேட்டை பொன்னு நாடார் கடையில் வேலை செய்து கொண்டிருந்தேன். தினம் ஆறணா கூலி கிடைக்கும். சில தினம் எட்டணாகூட கிடைக்கும். கூலி எவ்வளவு கிடைத்தாலும் அதில் இரண்டணாவுக்குக் குடித்து விடுவேன்.

"எனக்கு இரண்டு பிள்ளைகளும் ஒரு பெண்ணும் இருக்கின்றனர். அக்குழந்தைகள் எனக்கு உயிர் போன்றவர்கள். வீட்டுக்குப் போகும்பொழுது அவர்களுக்கு நான் பொரியுருண்டை வாங்கிச் செல்வதுண்டு.

"தீபாவளி வந்தது; என் குழந்தைகள் 'எனக்குப் புதுத்துணி வாங்கித்தா, பட்டாசு வாங்கித்தா' என்று தினந் தினம் கேட்க ஆரம்பித்தனர். இந்த வருஷமாவது குழந்தைகளுக்குப் பட்டாசும், புதுத்துணியும் வாங்கித்தர வேண்டுமென்று தீர்மானித்தேன்.

"என் கோடாலியை எடுத்துக் கொண்டு ஜீவன்லால் சேட்டிடம் சென்றேன். அன்று அவர் கடையில் கூட்டம் அதிகமாக இருந்தது. கூட்டம் செல்லட்டும் என்று வெகு நேரம் காத்திருந்தேன். ஆனால் சேட் கடைக்கு மேலும் ஜனங்கள் வந்துகொண்டிருந்தனர். அதற்குள் ஒரு மொந்தை போட்டுவிட்டு வரலாமென்று கிராமணி கடைக்குச் சென்று அடுத்த நாள் தருவதாகச் சொல்லி ஒரு மொந்தை கள் குடித்தேன்.

"திரும்ப சேட் கடைக்கு வந்தபொழுது பண்டாபீசு மணி பத்தடித்தது. கடைப் பையன் கதவை சாத்திக்கொண்டிருந்தான். சேட் உள் வெளிச்சத்தை அணைத்துவிட்டு, இரும்புப்பெட்டி பூட்டியிருக்கிறதா என்று இழுத்துப் பார்த்துக்கொண்டிருந்தார்.

"நான் அவர் முன் சென்று இளித்துக்கொண்டு நின்றேன் 'யாரப்பா அங்கே?' என்று சேட் உரத்த குரலில் கேட்டார். 'நான்தான் சேட், கந்தங்க' என்றேன் நான். 'என்ன ஸமாஸாரம்?' என்று மறுபடியும் அவர் கேட்டார். 'இந்தக் கோடாலியை வைத்துக் கொண்டு ரெண்டு ரூபா கொடுங்கள்" என்றேன் நான். 'ரூபா, தோ ரூபா! நைநை அப்பேன்' என்றார் அவர். நான் கெஞ்சினேன். 'அவர்' ரெண்டு ரூபா கொடுக்கமாட்டேன். அரை ரூபா கொடுக்கிறேன். இஷ்டமிருந்தா வைத்துவிட்டுப் போ' என்றார். 'என்ன சேட், ஒரே அடியா அநியாயம் பேசறயே, இரும்பு விக்கிற விலை யென்ன, இப்போ இது அஞ்சு ரூபா தாளுமே சேட் என்று மன்றாடினேன். 'அதெல்லாம் முடியாது, எட்டணாதான் கொடுப்பேன் இஸ்டமில்லாவிட்டால் போ' என்று வள்ளுன்னு விழுந்தார். எனக்குக் கோபம் வந்துவிட்டது. 'அநியாயம் பண்ணாதே சேட், ஏழைங்க சேட், அதுங்க வவுத்துலே அடிக்காதே சேட்' என்று காலைப் பிடித்துக்கொண்டு மன்றாடினேன். 'காலை விடுடா கழுதை, இங்கே கலாட்டா கிலாட்டா பண்ணினால் போலீசைக் கூப்பிடுவேன். என்று மிரட்டினார். என்னுடைய கோபம் அதிகமாயிற்று. 'போலீசையா கூப்பிடுவாய்?' என்று கூச்சலிட்டுக் கொண்டே என் கையிலிருந்த கோடாலி

யால் அவன் தலையில் ஓங்கி அடித்தேன். அவ்வளவுதான் எனக்குத் தெரியும். அதற்குப் பிறகு என்ன நடந்தது என்று எனக்குத் தெரியாது. போலீசு ஸ்டேஷனுக்கு வந்த பிறகு தான் என் மூர்ச்சை தெளிந்தது.''

மூச்சு விடாமல் ஜலப்பிரவாஹம் போல கூறிக்கொண்டு வந்ததால் ஏற்பட்ட சிரமத்தால் கைதி கந்தசாமி, சாட்சிக் கூண்டின் சட்டத்தில் அப்படியே சாய்ந்தான்.

நீதிபதி தனது தீர்ப்பைக் கூறி முடித்தார். "20 வருஷங்கள் கடுங்காவல் விதிக்கப்பட்டிருக்கிறது" என்ற தீர்ப்பின் கடைசி வார்த்தைகள், இறப்பவன் குரலைப்போல கந்தசாமி காதில் விழுந்தன.

4

''கடக், கடக்; கடக், கடக்; சட, சட'' என்று ரயில் சக்கரங்கள் தண்டவாளத்தில் வேகமாக உருண்டன. ரயில் பாதையின் பக்கத்திலிருந்த தந்திக் கம்பி ஏறி இறங்கிப் பின்னால் ஓடிக்கொண்டிருந்தது. தூரத்தில் ஒரு குன்று. அதன் உச்சியிலிருந்து காக்கைகள் பறந்து வந்தன.

''தம்பி, வெத்துப்பெட்டி இருக்கா?'' என்று கேட்டது ஒரு குரல்.

வெளியே உற்று நோக்கிக்கொண்டிருந்த கந்தசாமி திடுக்கிட்டுத் திரும்பினான். அவனுடைய கை தானாகவே பைக்குள் சென்று தீப்பெட்டியை எடுத்துக் கொடுத்தது. இருவர் கண்களும் சந்தித்தன. போலீஸ்காரன் உற்று நோக்கினான். கந்தசாமி அவனுடைய பார்வையைத் தடுக்க வெளியே தனது முகத்தைத் திருப்பிக்கொண்டான்.

பேஸின்பிரிட்ஜ் ஸ்டேஷன் வந்து சேர்ந்தது. போலீஸ்காரன் ஜன்னல் கதவில் சாய்ந்துகொண்டே கண்ணை மூடிக்கொண்டிருந்தான். கந்தசாமி மெதுவாக எழுந்து ஸ்டேஷனுக்கு எதிர்த்த பக்கத்தில் இறங்கி வெகு வேகமாக நடந்தான்.

ரஸ்தாவில் அவனுடைய கால்கள் தள்ளாடிக்கொண்டிருந்தன. சிறிது தூரத்திலிருந்த தென்னந்தோப்பிலிருந்து சகல பாஷைகளும் கலந்த ஆரவாரம் வந்துகொண்டிருந்தது. அப்பக்கம் அவன் கண்கள் தானாகவே திரும்பின. ஒரு குடிசையிலிருந்து கலயங்களை எடுத்துக்கொண்டு குடியர்கள் வெளிவந்துகொண்டிருந்தனர். அவனுடைய காலடிகளைத் தடவிக்கொடுத்தது.

சிந்தாதிரிப்பேட்டை, அவன் இருபது வருஷங்களுக்கு முன்பு வசித்த இடம். முன்பிருந்ததை விட இப்பொழுது ஆங்காங்கு பெருத்த மாறுதல்கள் காணப்பட்டன. ஓங்கிப் பரந்து வளர்ந்த அரசமரமொன்றும், திண்ணை வைத்த வீடுகளும் பழைய சிந்தாதிரிப்பேட்டையின் அடையாளங்களாக விளங்கின.

மார்க்கட்டில் ஒரே கூட்டம், ஜவுளிக் கடைகளிலும், மளிகைக் கடைகளிலும், பட்டாஸ் கடைகளிலும் ஈ மொய்ப்பதைப்போல ஜனங்கள் குழுமியிருந்தனர். கந்தசாமி ஒரு லாந்தக்கம்பத்தில் சாய்ந்து பெற்றோர்களின் ஆடைகளைப் பிடித்திழுத்துக்கொண்டு வரும் குழந்தைகளின் முகங்களையே உற்று நோக்கிக்கொண்டிருந்தான். சிறுவர் சிறுமிகளின் முகங்கள் குதூகலத்துடன் கடைகளில் அழகாக அடுக்கி வைத்திருந்த பட்டாஸ் வகையறாக்களையே பார்த்துக் கொண்டிருந்தன.

அவன் சாய்ந்திருந்த கம்பத்தின் விளக்கு ஏற்றிய பிறகுதான் உணர்வு பெற்றான். அவனைத் தாண்டி பலர் சளவளவென்று பேசிக்கொண்டுசென்றனர்.

ஜீவன்லால் சேட் கடை இருந்த இடத்தில் காணவில்லை. அந்த இடத்தில் பாபுமியான் பாவாடை தைத்துக்கொண்டிருந்தான். இன்னும் சிறிது தூரம் நடந்தான். ஒரு தண்ணீர்க் குழாய் - அதே குழாய்! அக்குழாயில் அவன், குழந்தைமுதல் பல் தேய்த்திருக்கிறான். அக்குழாய்க்குப் பக்கத்தில்தான் குடிசைகள். ஆனால் குடிசைகளை அங்கே காணவில்லை. அவைகள் இருந்த இடத்தில் பெரிய பெரிய கட்டிடங்கள் எழும்பி யிருந்தன.

குடிசைகளுக்குப் பதிலாக மாடி வீடுகளைப் பார்த்ததும் கந்தசாமிக்கு ஒன்றும் புரியவில்லை. திரும்பி குழாயைப் பார்த்தான். அதற்குச் சிறிது தூரத்திலிருந்த பிள்ளையார் கோயிலும் அங்கேயேதான் இருந்தது. ஆனால் குடிசைகள் மட்டும் காணவில்லை. கந்தசாமி வேகமாக மேலும் சிறிது தூரம் நடந்தான். அங்கும் குடிசைகள் இருந்த அடையாளமே இல்லை. யாரையாவது கேட்கலாமென்றாலோ இவன் கேள்விக்கு எவனும் பதிலளிப்பவனாகத் தோன்றவில்லை. கடைசியில் அவன் ஒரு கிழவனைச் சந்தித்தான். கிழவன் அவனை ஒருதரம் ஏற இறங்கப் பார்த்து விட்டு, "அந்தக் குடிசைகளா! அது போய் எவ்வளவு காலமாச்சு!" என்று ஆச்சர்யத்துடன் கூறினான். "குடியிருந்தவர்களெல்லாம் எங்கே போயிருக்கிறார்கள்?" என்று கந்தசாமி கேட்டான். "அவங்களா? இந்தக் காவாய்க்கு அக்கரையில் குடியிருக்கிறார்கள்" என்று கூறிவிட்டுச் சென்றான்.

கந்தசாமி வேகமாக நடந்து சிறிது தூரத்திலிருந்த பாலத்தின் வழியே அக்கரையை அடைந்தான். அங்கே ஓரே நிசப்தமாக இருந்தது. ஓரோரு குடிசையில்தான் மண்ணெண்ணெய் விளக்கு எரிந்துகொண்டிருந்தது.

மூன்றாவது சந்து தாண்டினான். நான்காவது சந்து நுழையும்பொழுது முதல் வீட்டிலிருந்து அழுகைக் குரல் வெளிவந்தது. கந்தசாமி சிறிது தயங்கி ஒரு சிறிய ஜன்னலின் வழியே உள்ளே நோக்கினான். ஒரு வயது சென்ற ஸ்திரீ சுவரில் சாய்ந்துகொண்டு அழுது கொண்டிருந்தாள். அவளுடைய முகத்தில் அபூர்வத்தின் சாயலை கந்தசாமி கண்டான். அவளுக்கு எதிரே ஒரு இளைஞன் வலை பின்னிக்கொண்டிருந்தான். அவன் அடிக்கடி அழுதுகொண்டிருந்த ஸ்திரீயை வெறுப்புடன் நோக்கிக் கொண்டிருந்தான்.

"அப்பா ராசு, நாளைக்காவது வேலூருக்குப் போய் பார்த்துவாடா", என்று கெஞ்சும் பாவனையில் அந்த ஸ்திரீ இளைஞனிடம் முறையிட்டாள்.

இதைக் கேட்டதும் இளைஞனுடைய கை அதிவேகமாக வேலை செய்தது. அவன் கண்களில் நெருப்புப் பொறி பறந்துகொண்டிருந்தது.

"அப்பா, எனக்காகப் பார்த்துவாடா. இந்தத் தீவளிக்கு இருவது வருசம் ஆகப்போறதுடா. அவர் சொகமா இருக்கார்னு தெரிஞ்சுதின்னா நான் போக்குன்னு பிராணனை விட்டுடரேண்டா" என்று மேலும் கெஞ்ச ஆரம்பித்தாள்.

நெருப்பில் நெய்விட்டதுபோல அவனுடைய கோபம் இன்னம் அதிகமாயிற்று. தான் பின்னிக்கொண்டிருந்த வலையை விசிறி எறிந்தான். அந்த ஸ்திரீயை ஒருதரம் ஈட்டி வீசுவதைப் போலப் பார்த்தான். "என்னால் அந்தக் கொலைகாரனைப் பார்க்க முடியாது" என்று சீறிவிட்டு விடுவிடுவென்று வெளியே சென்றுவிட்டான்.

"கொலைகாரன்" என்றது கந்தசாமியின் வாய். அவன் கண்களிலிருந்து பொலபொலவென்று கண்ணீர்த் துளிகள் கொட்டின. "ஆம் கொலைகாரன் தான்" என்றான் அவன் மறுபடியும். அவன் வைத்திருந்த மூட்டை அவனை அறியாமல் கீழே நழுவியது.

* * *

அதே பாலத்தில் ரயில் வண்டி சப்தத்துடன் சென்றது. அதே வெள்ளம்; அதே சுழல். ஆனால் அவனுடைய மனம் இப்பொழுது அந்த இருபது வருஷ சிறைவாசத்தை நினைப்பூட்டிக் கொண்டிருந்தது.

பலபலவென்று பொழுது விடியுமுன் கந்தசாமி வேலூர் மத்திய சிறை முன் பாக நின்றான். அவனைப் பார்த்த சிறைக் காவலன் ஆச்சர்யப்பட்டு "எங்கே அப்பா வந்தே?" என்று கேட்டான். அதற்கு கந்தசாமி, "என் அறையைத் திறந்துவிடு, நான் உள்ளே போக வேண்டும்" என்று அமைதியாகப் பதில் கூறினான்.

அத்தியாயம் - 3

உறுத்திய ஊக்கம்

[ஸ்ரீ டி. வி. ராதாகிருஷ்ண சாஸ்திரி, எம். ஏ., எல். ஐ. எம்.]

சாஸ்திரிகள் நிலத்திலுழைத்தது போலவே தன் தொழிலிலும் பாடுபட்டார். ஏழைகளுக்கெளிதில் கிடைக்கக்கூடிய மருந்துகளையும் எல்லா சந்தர்ப்பங்களிலும் சலிப்பு வெறுப்பில்லாமல் எல்லோர்க்கும் உதவும் சுபாவத்தையும் பெற்றிருந்தார். இவருடைய கைராசியின் பெருமையை அறியாதவர்கள் சுற்றுப் பக்கங்களில் ஒருவரும் இல்லை. இவர் வைராக்கியத்துடன் திட்டங்கள் வகுத்துக் காரியாதிகளைக் கவனித்து வந்தார். இதன் பலன் பலதுறைகளிலும் உழைக்க நேரம் தாராளமாகக் கிடைத்தது.

அதிகாலையிலேயே எழுந்திருந்து கர்மானுஷ்டானாதிகளை முடித்துக்கொண்டு வெளிச்சம் தோன்றியவுடன் வயல்களைச் சுற்றிப் பார்த்துவிட்டு வீட்டிற்குத் திரும்புவார். இவர் வீட்டில் இவர் வரவை எதிர்பார்த்துக்கொண்டு உள்ளூர் ஜனங்களும் வெளியூர் ஜனங்களும் வெகு பேர்கள் சிகித்சைக்காகக்கூடி இருப்பார்கள். புன்சிரிப்டன் அனைவருக்கும் நல்வரவு கூறி அவரவர்கள் நோய்களை நன்கு ஆராய்ந்து தக்க ஔடதங்கள் கொடுத்து கூறுவன கூறி அனுப்ப ஒரு மணி நேரம் பிடிக்கும். இவ்விதம் சாஸ்திரிகள் உதவியளித்தது இக்கிராமத்தின் நெடுங்காலக் குறையிலொன்றை வெகு தூரம் நிவர்த்தி செய்தது.

இவ்வைத்திய கைங்கர்யம் முடிந்தவுடன் சிறிது க்ருக க்ருத்யங்களையும் கவனித்துவிட்டு எட்டு மணி சுமாருக்கு வீட்டுத் திண்ணையில் வந்தமருவார். உடனே பொன்னம்மாளும் சுப்ரமணியமும் தங்கள் புத்தகங்களையும் மற்றைய உபகரணங்களையும் எடுத்துக்கொண்டு வந்து படிக்க ஆயத்தமாவார்கள். தந்தையினிடமிருந்து எண்ணையும் எழுத்தையும் வெகு சீக்கிரத்தில் பயின்றுவிட்டன இக்குழந்தைகள். கதைகள் சொல்லியும் அவைகளை நடித்துப் பார்க்கும்படி பயிற்சி செய்தும் ஒரு குதூகலத்துடன் பல்வேறு விஷயங்களையும் பசுமரத்தாணிபோல் இவர்கள் மனதில் பதிய வைத்தார் சாஸ்திரிகள். பலவேறு தொழிலாளிகளைப் பற்றியும் அவர்களின் பரிபாஷைச் சொற்களையும் இவ்விதமே இவர்களறியச் செய்தார். ஒருவருக்கொருவர் பேசிப் பழகும்படியாகப் பல சம்பாஷணைகளை வகுத்து ஸ்பஷ்டமாகப் பாஷாஞானம் ஏற்படும்படி செய்தார். பெரிய வேதாந்திகளைப் போல் தத்வ விசாரணை செய்யவும் பழக்கினார். குழந்தையுள்ளங்கள் எவ்விஷயங்களையும் தீவிரமாக ஏற்குமென்ற காரணத்தாலேயே அரசியல், பொருளாதாரம், கூட்டுறவு முதலிய விஷயங்களையும்கூட வெகு சுலபமாக இவர்களுக்குப் புகட்டினார். இவர்களிலொருவரை மாணாக்கனாகவும் மற்றொருவரை ஆசிரியனாகவும் நடிக்கச்செய்து விஷயங்களை நன்கு அறிந்திருக்கிறார்களா என்று சோதித்து மகிழ்வார். சிறிதுகூட பயமென்பதையே அறியாத வகையில் கல்வியைப் போதித்தார். இக்குழந்தை

களும் படிப்பதில் மேலும் மேலும் ஆவலடைந்து வந்தார்கள். தினம் பதினொரு மணி வரையில் படிப்பார்கள்.

இக் குழந்தைகளின் தேற்சியைக் கண்டு அக்கம் பக்கத்தார்களெல்லாம் ஆச்சரியத்தில் மூழ்கினார்கள். தங்கள் குழந்தைகளும் இவ்விதம் ஏன் படிக்கக் கூடாதென்று யோசித்தார்கள். போர்டு இலவச பாடசாலைத் தலைமை உபாத்தியாயர் வாராகியிடம் போய் தங்கள் குழந்தைகளுக்கும் இவ்விதம் தேற்சி வேண்டுமென்று சொன்னார்கள். அவரோ இதை லக்ஷ்யம் செய்யவில்லை. பத்து நாட்களில் மாற்றுதலாகி போகிறவர் இங்கு கல்வியைப்பற்றிக் கவலைப்பட முடியுமா? அவர்போய்ச் சேரவேண்டிய ஊரில் சாப்பாட்டிற்கு வசதி உண்டா, ஊரில் நாலு காசு கூடுதலாகச் சம்பாதிக்க வசதியுண்டா என்றெல்லாம் ஆராய்ச்சி செய்வதற்கே நேரமில்லாமல் தவித்துக்கொண்டிருந்தார். இவர் மாற்றுதலாய்ப் போனதும் மற்றொருவர் வந்தார் விசித்திரமான பெயருடன். சுத்தராயன் என்று சொல்லிக்கொண்டார் தன் பெயரை. ராயரில்லை அய்யர்தான். தலைமுறை தலைமுறையாகத் தர்மசத்திரம் போல் கேள்வி முறையில்லாமல் சமயல்காரன் வைத்ததே சட்டம் என்றபடி வாத்தியார்கள் ஏதோ காமா சோமா என்று நடத்திவந்த இந்தப் பள்ளிக் கூடத்தைச் சீர்திருத்தம் செய்ய அனுப்பப்பட்ட தேவதூதன் என்று எண்ணிக்கொண்டார். குழந்தைகள் புத்தகங்களைத் தொடவேண்டா மென்றார். குரங்காட்டம் முதல் கோடிபந்து வரையில் ஒவ்வொரு ஆட்டமாக ஆடிப் பழகவேண்டு மென்றார். இவ்வாட்டங்கள் மூலமே சகல விஷயங்களையும் போதித்து விடலாமென்று சொன்னார். உதவி ஆசிரியர்களும் அப்படியே என்று ஆமோதித்தார்கள். கிராமத்தார்கள் ஆக்ஷேபணை செய்வதில் பலனில்லை என்று இருந்து விட்டார்கள். அதிகாரிகள் வந்து ஆக்ஷேபித்தால் என்ன செய்வது என்ற கவலை இல்லை. அவர்கள் வந்தால் குக்கிராமத்தில் அவர்களுக்கு வேண்டிய வசதிகளைச் சரிவரக் கவனிக்கவேண்டியது. கூடுமான வரையில் எல்லாப் பிள்ளைகளையும் ஆஜர் காட்டுவது, ஊரிலுள்ள பெரிய மனிதர்களை அறிமுகப்படுத்துவது, போர்டு தலைவருக்கதிகாரி வேண்டியவரென்றால் நிர்வாகத்தைச் சிலாகித்துப் பேசுவது, இல்லாவிட்டால் நாலு பேர் காதுபட சொல்லக்கூடாது என்ற பீடிகையுடன் சாங்கோபாங்கமாகத் தூற்றுவது; கடைசியில் தாங்கள் வெகுநாட்களாகக் கடைதேறுகப் பள்ளியில் இப்பொழுதுதான் குழந்தைகள் விளையாட்டுக்களை அக்கறையுடன் போதித்து ஊக்கமுடன் கல்வி புகட்டுவதாக விநயத்துடன் விஞ்ஞாபித்துக் கொள்ளுவது. இவ்வளவுக்கும் மசியாதவர்போல் குழந்தைகளைப் பரீக்ஷித்துக் கிளற ஆரம்பித்துவிட்டால் அதிகாரியின் முகத்தைக் கொஞ்சும் பாவனையில் நோக்கத் தங்களுக்குத் தெரியாத விஷயமா. இந்த மாமூல்களெல்லாம் என்று ஜாடையாக ஞாபகப்படுத்துவது. அதிகாரி மேலும் இங்கித மறியாமலிருந்தால் எத்தனை நாளைக்கு இவ்வாழ்வு என்று உள்ளுக்குள்ளேயே பொருமலுடன் சமாதானம் செய்துகொள்ளுவது. இவ்வித முறைகளெல்லாம் நன்கு பயின்றிருந்த சுத்தராயர் ஊர் ஜனங்களின் கோரிக்கைக்கெல்லாம் அசைந்து கொடுக்கவில்லை என்றாலாச்சரியமில்லை. சிறுகச் சிறுக ஊராரும் தங்கள் பிள்ளைகளைப் பள்ளியிலிருந்து நிறுத்தி சாஸ்திரிகளிடம் ஒப்புவித்தார்களென்றால் ஆசிரியர் யாரை நொந்துக்கொள்ளுவது?

சாஸ்திரிகள் இக்கைங்கர்யத்தையும் உத்சாகத்துடன் ஏற்றுக்கொண்டார். "தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டில்" என்றதை ஞாபகத்திலிறுத்தி இப்பாலகர்களுக்குப் போதிப்பதில் தீவிரமாக முனைந்தார். இவர்கள்தான் தேசத்தின் வருங்கால பிரஜைகள் என்று கூறுவார். நல்ல பழக்க வழக்கங்களையும் தேசபக்தியையும் புகட்டி ஒரு பெரும் தேசத்தொண்டு செய்வதில் முனைந்தார். அடிப்படைத் தத்துவங்கள் கிராமத்தி

லேயே என்றறிவுறுத்தும் வகையில் போதித்தார்.

இவ்விதமே சாஸ்திரிகளின் பண்ணைக் காரியங்களும் சரிவரப் பெருகியது. நிலம் மிக்க செழிப்பாக விளைந்தது. வியவசாயத்தில் அதிகம் பழக்கமில்லாத பட்டணவாசிக்கு இவ்வளவு அதிர்ஷ்டமா என்ற ஓம்பலும் விருத்தியடைந்தது. பொறாமையுற்ற பலரும் பலவாறுபேசத் தலைப்பட்டார்கள். பள்ளிக்கூட வாத்தியார்களும் தங்களுக்குப் போட்டியாக வந்த சாஸ்திரிகளைக் கவிழ்க்க இக்கும்பலில் சேர்ந்து த்வேஷப் பிரசாரம் செய்தார்கள்.

கிராமத்தில் மூலை முடுக்குகளிலெல்லாம் சாஸ்திரிகளைப்பற்றிய ஏளனச் சொற்கள் நிறம்பின. அந்தரங்கத் தியாகப் பாடுப்பட்டாலும் இந்த அக்னி பரீக்ஷை கட்டாயம் ஏற்படும் என்றே எதிர்பார்த்த சாஸ்திரிகளும் மனம் தளராது காரியங்களைச் செய்துவந்தார்.

உலக வழக்கிற் கொத்திராத காரியங்களெல்லாம் ஏளனத்திற் கென்றே யமைந்தவை என்பது தலையூரில் மட்டுமில்லை, உலகமெங்குமேதான். எல்லோருக்கும் தாராளமாக உதவிவிட்டுத் தன் காரியங்களைக் கவனிக்க அதிகப் பரபரப்புக்காட்டாதசாஸ்திரிகளை அப்பாவி என்றே நம்பினார்கள். ஏளனம் செய்தார்கள். பொறாமைக்காரர்களும் சுயநலமிகளும் விரித்த வலையில் சிக்கினார்கள். இத்தலையூர் வாசிகளுக்கு அதிகச் செலவில்லாமலேயே வைத்திய உதவியும் இவர்கள் குழந்தைகளுக்கு நேர்மையான கல்வியும் கிடைத்து வருகையிலேயே இவைகளுக்குக் காரணபுருஷரான சாஸ்திரிகளிடம் ஏன் ஓர் அலக்ஷிய புத்தி என்று மலைக்கவேண்டாம். இதுதான் உலக சுபாவம். எப்பொழுதும் பிறரால் சுறண்டப்பட்டே அனுபவப்பட்டிருக்கும் இச்சனங்கள் உண்மையிலுதவப்படவே ஓர் பெருமகிழ்ச்சியடைந்து மூளையை இழக்கிறார்கள். சுய நலமிகளின் பிரசாரத்தை நம்பி "சோழியன் குடுமி சும்மா ஆடுமா?" என்று யோசிக்கிறார்கள். சாஸ்திரிகளைச் சந்தேகிக்கிறார்கள்.

சுதந்தரத்தை யனுபவிக்காதவர்கள் மனத்திற்கு உபகாரம் கேலியாகவே தோன்றும். சூழ்ச்சி என்றும் படும். அடிமைக் குட்டையில் ஊறியவர்கள் த்யாகத்தையும் உபகாரத்தையும் பைத்தியக்காரனின் வேலை என்றே நம்புவார்கள். அவர்களை நொந்து பயனில்லை. உண்மையனுபவம் கிட்டி உய்யும் வகையில் அவர்களுக்கு வழி காட்டவேண்டும். அவர்கள் மனத்தைக் கவிந்திருக்கும் பாசம்போன்ற அடிமைத்தனம், நன்றியாகிற அலைகளை எழுப்பி மோதி மோதி இப்பாசியை துடைக்கும் வகையிலும், வரையிலும்கூட, தொண்டர்கள் ப்ரதி ப்ரயோசனத்தை எதிர்பார்க்காமல் த்யாகத்தையும் உபகாரத்தையும் செய்து வரவேண்டும். இவ்விதமே செய்ய சாஸ்திரிகளும் முனைந்தார்.

சாஸ்திரிகள் தன் தேவைக்கு மிஞ்சி விளைந்த பொருள்களை எல்லாம் அப்பொழுதைக் கப்பொழுதே கேட்டவர்களுக்கெல்லாம் கேட்ட விலைக்கே கொடுத்து வந்தார் என்பது ஆச்சரியத்தை விளைவித்தது. சில பேராசைக்காரர்கள் இந்த குணத்தைப் பயன்படுத்திக் கொண்டு லாபம் அடைய பலப்பட்டார்கள். இவர்களில் கோவிந்தய்யரும் ஒருவர். இருபது ஏக்கர் நஞ்சையும் மும்பதாயிரம் ரொக்கமும் இவரடைந்த பித்ரார்ஜிதம். பொறாமையும், வீண் ஜம்பமும், பணத்திமிரும் படைத்த இவர் தன் சொத்தைக் கைக்கொண்டபொழுதே சுப்பா தீக்ஷிதனையும் கையாளாக அமர்த்திக்கொண்டார். தீக்ஷிதன் ஓர் ஏழைப் பிராமணன். துஷ்டர்கள் கையில் சிக்கிய லக்ஷ்மிக்கிரங்கி அவர்களை யுறவாடியே கெடுத்து இப்பரதேவதைக்கு விடுதலையளிக்கும் கைங்கரியத்தில் நன்கு தேர்ந்தவன். இவன் யோசனைகளைக்கொண்டு நிர்வாகம் நடத்திய பலனிப்பொழுது கோவிந்தய்யரின் பூஷ்திதி எட்டு ஏகர்களும் ரொக்கம் நாலாயிரம் ரூபாயென்றும் பெருமைப்படும் நிலைக்கு வந்துவிட்டன. இத்

தீக்ஷிதன் தூண்டுதலால் சாஸ்திரிகளிடம் பொருமையுற்ருர் கோவிந்தய்யர். எல்லா விதத்திலும் சாஸ்திரிகளைத் துளைத்துவிடக் கங்கணம் கட்டிக்கொண்டார். தன் சகாக்களைக் கலந்து யோசனை செய்தார். சண்டைக்குக் காரணம் கண்டு பிடிக்க முயன்ருர்கள். முடிவில் கொள்முதல் மூலமாகவே துலக்குவதென்று தீர்மானித்தார்கள். அத்தீர்மானத்தைக் கோவிந்தய்யரே அமுலுக்குக் கொண்டுவர முதலில் கிளம்பினுர். சாஸ்திரிகளை நாடிச் சென்ருர்.

சாஸ்திரிகள் பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக்கொடுத்துக் கொண்டிருக்கும் சமயம் ஒரு பெருத்த நமஸ்காரத்துடன் கோவிந்தய்யர் வந்து சேர்ந்தார். சாஸ்திரிகளும் புன்சிரிப்புடன் வரவேற்று வந்த காரியம் யாதோ என்று வினவினுர். கோவிந்தய்யர் தன் வேலைக்காரர்கள் சரிவர நிலத்தைக் கவனியாததனுல் விளைச்சல் மிக்க நஷ்டமாகிவிட்டதைக் குறித்துப்பிரலாபித்துவிட்டுத்தான் தன் பெண் கலியாணத்திற் கலேந்துகொண்டிருந்தபொழுது இவ்வயோக்யன்கள் சரிவரக் கவனிக்கவில்லை நிலத்தை என்ற புகாரைக் கூறினுர். சாஸ்திரிகளிடைமறித்து "ஐயர்வாள், ஏது ஒரேயடியாகப் பழி சுமத்துகிறீர்களே! வேலைக்காரர்களைக் கூறி என்ன பயன்? எல்லாம் நாம் வைத்துக்கொள்வதில் இருக்கிறது. ஆற்றிலொருகால் சேற்றிலொரு கால் வைக்க முடியுமோ? எப்பொழுது கலியாணத்திற் கலேச்சல் என்றீர்களோ அப்பொழுதே சிவனே என்று குத்தகைக்கு விட்டுவிட வேண்டும்." இதைக்கேட்ட கோவிந்தய்யர் திகைத்து சிறிது நேரம் மௌனமாக இருந்தார். பிறகு சாஸ்திரிகளைப் பார்த்து, "நீங்கள் சொல்லுவது சரிதான். ஆனுல் அப்படி எல்லோருக்கும் இருக்க முடிகிறதா? உங்களுக்குச் சதாசிவன் உண்மையுட னுழைக்கிருன். பூதேவியின் கடாக்ஷமும் பூர்ணமாக இருக்கிறது. அதிருக்கட்டும். உங்களுக்கு உளுந்து நன்ருக விளைந்திருக்கிறதென்று கேள்விபட்டேனே!" என்ருர்.

"எல்லாம் உழைத்ததற்கு மோசமில்லாமல் ஐந்தாறு மூட்டைகள் தேறும்" என்ருர் சாஸ்திரிகளும். "அப்படியானுல் எனக்குக் கொடுக்கிறீர்களா? விளைச்சலில்லை. கலியாணத்தை வேறு ஏற்பாடு செய்துவிட்டேன். ரொம்ப உபகாரமாக விருக்கும்" என்ருர் கோவிந்தய்யர்.

சாஸ்:—"தாராளமாக வாங்கிகொள்ளும். எல்லாச் செலவுகளும் போக மிஞ்சியதை நான் வைத்துக்கொண்டு என்ன செய்யப் போகிறேன்?

கோவி:—உங்களுக்கு மிஞ்சியதைத் தான் கேழ்க்கிறேன். கலம் 3 ரூபா விற்கிறது சரிதானே?

சாஸ்:—இதென்ன கேள்வி ஐயா! ஊரிலுள்ள விலையை ஒப்புக்கொள்ளாமல் வேறு விலையா சொல்லப்போகிறேன்?

கோவி:—நீங்கள் நேரான மனிதரென்று தெரிந்து தானே வந்தேன். உங்களைப்போல் யார் இந்த ஆரம்ப விலையில் மிஞ்சியதை எல்லாம் விற்பார்கள்? இந்த உபகாரத்திற்குப் பகவான் நன்மையைக் கொடுப்பர்.

சாஸ்திரிகள் மேலொன்றும் கூருமல் தனக்குத்தன் குடியான குடும்பத்திற்கு அக்கிராகாரத்தில் விளைச்சல் குறைந்து போன யோக்கியர்களான சிலருக்கு என்று தனித்தனியே மனத்தில் பங்குப் போட்டு விதைக்கென்றும் ஒதுக்கி வைத்துவிட்டு மிஞ்சிய மூன்று மாக்கால் உளுந்தைக் கோவிந்தய்யருக்கே பூராவையும் 3 ரூபாயிற்கென்று கொடுத்தார். கோவிந்தய்யர் ஏமாற்றமடைந்தார். ஓர் அசட்டுச் சிரிப்புடன் கிடைத்ததைப் பெற்றுச் சென்ருர். போகும் பொழுது அவர் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தன என்பது சாஸ்திரிகளின் கல்பனைக் கண்களுக்குப் புலப்பட்டன. ஒரு புன்சிரிப்பில் இதை அகற்றிவிட்டுத் தன் காரியங்களைப் பார்க்கலானுர்.

இவ்விதமே ஆரம்ப விலையிலேயே இவர் பொருள்களை எல்லாம் வாங்கி சென்று விடலாமென்று வந்தவர்கள்

எல்லோருமே கிடைத்ததைப் பெற்றுச் செல்லும்படியாகிவிட்டது. அவர்கள் ஏமாற்றங்களெல்லாம் கோபத்தைக் கிளறின. எல்லோரும் கோவிந்தய்யர் வீட்டில் கூடினார்கள். சுப்பாதீக்ஷிதன் எதிர்பார்த்ததும் இதுதான். கோவிந்தய்யரைத் தூண்டிவிட்டான். கோவிந்தய்யரும் துர்ப்போதனையினால் அறிவை இழந்து ஆத்திரமுடன் தன்சகாக்களைப் பார்த்துச் சொன்னார். "பட்டணத்திலே இருந்து வந்திருக்கிறோமென்று கர்வம் இந்த சாத்திரிக்கு. இவன் கொட்டத்தை யடக்கவேண்டும். அற்பனுக்கு பவிஷு வந்தால் அர்த்த ராத்திரியில் குடை பிடிப்பான் என்றபடி ஏதோ துள்ளுகிறான்!" "அப்படித்தான் கிறேங்கோ" என்று சேர்ந்து கொண்டான் சாமி நாயக்கன்.

"நெல்லுகாச்சமரம் எப்படிருக்கும்னு வந்தவன். நாலுகலம் கூட விளஞ்சுட்டுதுன்னுதலே தெறிச்சுப் போச்சுங்கோ" என்று கூடப் பாடினான் மாரிமுத்து.

"மகா தர்மத்தையும் 'நியாயத்தையும் கண்டுவிட்டவனுட்டம் கூத்தடிக்கிறான். காலணாவிற்கு மதிப்பில்லாத சில அக்கிராகாரத்து அப்பாவிகளுக்கும் குடியானத் தெருவில் சில கழுசடைகளுக்கும் ரிசர்வ் பண்ணுகிறானாம் ரிசர்வ்! மிஞ்சியதை நமக்குத் தருகிறானாம். நாம் என்ன பிச்சைக்காரர்களா?" என்று உணர்ச்சி ததும்ப கேட்டார் கோவிந்தய்யர். பல பேர்களும் "அக்கிரமம்" "அக்கிரமம்" என்று கத்தினார்கள். "இதை முளையிலேயே கிள்ளி எறியாவிட்டால் அனர்த்தம் வந்துவிடும். நம்மை யாரும் இவ்வூரில் மதிக்க மாட்டார்கள்" என்று தூண்டி கொடுத்தான் சுப்பாதீக்ஷிதனும். எல்லோரும் வெகு நேரம் யோசித்து சாஸ்திரிகளைத் துன்புறுத்தத் திட்டம் வகுத்தார்கள்.

நமது புத்தகசாலை

		ரூ.	அ.
1.	ஜடாதரன் ...	1	12
2.	தேசபக்தன் கந்தன் ...	2	0
3.	முருகன் ஓர் உழுவன் ...	1	8
4.	பச்சைக்கிளி ...	2	0
5.	சத்தியமூர்த்தி ...	1	0
6.	சந்தனக் காவடி ...	1	6
7.	புஷ்பஹாரம் ...	1	8
8.	பாசம் முதலிய கதைகள்	2	8
9.	கைக்குத்து அரிசியும் மில் அரிசியும் ...	0	10
10.	உணவும் சுகவாழ்வும் ...	1	4

சுவேதாரண்ய ஆசிரம புஸ்தகசாலை,
34, அலமேலுமங்காள்புரம்,
மயிலாப்பூர், சென்னை

BOOKS FOR ALL

By K. S. Venkataramani

1. Paper Boats (5th Edition) ... 1 4
2. Kandan, the Patriot 2 0
3. On the Sand-Dunes... 1 0
4. The Indian Village-A Ten Year Plan (2nd Edition) ... 0 12

By Manjeri S. Iswaran

5. Naked Shingles ... 2 0
6. Angry Dust ... 2 0

By C. M. Srinivasan

7. Organisation and Organisations ... 1 8

Svetaranya Ashrama,
34, Alamelu Mangapuram,
Mylapore, Madras.

கர்ம பூமியில் யுத்தம் நடக்கிறது

'புலி வந்துவிட்டது!' 'புலி வந்துவிட்டது!' என்ற கதையாகத்தான் இருக்கிறது. இப்பொழுது ஜப்பான் இந்தியாமீது படையெடுத்திருப்பது. 'ஜப்பான் வந்துவிட்டான்!' 'ஜப்பான் வந்துவிட்டான்!' என்று சொல்லிக் கொண்டேயிருந்து கடைசியில் அவனும் வந்துவிட்டான்!

மணிப்புரி சமஸ்தான எல்லையைக் கடந்து ஜப்பானியர் வந்துவிட்டதாகவும், நமது முன்னணித் துருப்புகளுடன் கைகலந்து விட்டதாகவும் சென்ற மார்ச் மாதம் 22-ந் தேதியன்று வெளியிடப்பட்ட ஓர் அறிக்கை கூறுகிறது.

இந்த யுத்தத்திலேயே இந்திய பூமியில் போர் நடப்பது இதுதான் முதல் தடவையாகும். சண்டை முன்பு பர்மா முனையிலேயே இருந்தது. இப்பொழுது அஸ்ஸாம் முனைக்கும் இம்பால் முனைக்கும் நகர்ந்து வந்திருக்கிறது. "இம்பால் கையைவிட்டு எதிரி வசம் போனால்கூட ஒன்றும் முழுகிவிடாது" என்றும் அபிப்பிராயம் தெரிவிக்கப்படுகிறது.

'இம்பால் ரோடு துண்டிக்கப்பட்டது. கோஹிமாமீது எதிரிகள் நாட்டம் கொண்டிருக்கின்றனர். இம்பாலுக்கு வடக்கே ஜாப் துருப்புகள் ஏராளமாகக் குவிகின்றன' வென்றும் தகவல் கிடைத்து வருகிறது. நிலைமை சிறிது மோசமாகத்தான் இருக்கிறதென்றும் தகவல் கொடுக்கப்படுகிறது.

சென்ற மூன்றாந் தேதியன்று மணிப்புரி சமஸ்தானத்துக்கு மேற்கேயுள்ள கால்சார் பகுதியிலும், மணிப்புரி பகுதியிலும் எதிரி விமானங்கள் குண்டுகளை வீசினவென்றும், ஆனால் உயிர்ச் சேதம் எதுவும் நேரவில்லையென்றும், சில குடிசைகள்தான் சேதமடைந்தனவென்றும் கூறப்படுகிறது. அஸ்ஸாமை இனிமேல் ஜப்பானியர் அடிக்கடி தாக்கலாமென்று சர்க்கார் எச்சரிக்கை செய்திருக்கின்றனர்.

இம்பாலுக்கு வாபஸாகத் திட்டம் போட்டிருந்த 17-வது இந்திய டிவிஷனை வளைக்க எதிரிகள் முயற்சித்தனரென்றும், ஆனால் இந்திய டிவிஷன் எதிரிகளிடம் சிக்கிக்கொள்ளாது வாபஸாயினவென்றும் அ. பி. யுத்த நிருபர் கூறுகிறார். இவ்விதம் வாபஸாக இந்த டிவிஷனுக்கு 21 நாட்கள் பிடித்ததாம்.

இம்பாலுக்கு வடக்கிலும், வட கிழக்கிலும் ஜப்பானியர் 10 மைல் தூரம் முன்னேறியிருக்கின்றனர். கொஹிமா நோக்கியும் அவர்கள் முன்னேறுகின்றனர். மணிப்புரி ரோடுக்கு மேற்குப் புறத்தில் எதிரிகள் வந்துவிட்டனர் என்று 6-ந் தேதியன்று தெரிவிக்கப்பட்டது. இம்பால்-கொஹிமா பாதையிலுள்ள ஸ்தானங்களை ஜப்பானியர் வலுப்படுத்திக் கொள்ளுகின்றனர்.

மணிப்புரி எல்லைக்கருகிலுள்ள டாமு என்னுமிடத்தை சென்ற 9-ந் தேதியன்று எதிரிகள் பிடித்தனர்.

திமாப்பூருக்கு தினேதினே ஆபத்து அதிகரித்துக்கொண்டு வருகிறது.

வங்க அஸ்ஸாம் ரயில்வே பாதிக்கப்படலாமென்றும் 'நியூயார்க் டைம்ஸ்' பத்திரிகை எச்சரித்திருக்கிறது.

ஸர். அல்லாடியின் சிஷ்யர்

ஸ்ரீ சத்தியமூர்த்தி ஸர். அல்லாடி கிருஷ்ணஸ்வாமி அய்யரிடம் படித்திருக்கிறார். ஸ்ரீ சத்தியமூர்த்தி சரித்திர ஆசிரியராக இருந்தபொழுது அவரிடம் டாக்டர் சுப்பராயன் படித்திருக்கிறாராம்.

அமிர்தாஞ்சன் லிமிடெட்

மதராஸ்

பொன் விழா ஞாபகார்த்தமாய் தங்கள் அன்பு மிக்க

ஆசி மொழிகளை எங்களுக்கு அனுப்ப வேண்டுகின்றோம்

அமிர்தாஞ்சன் லிமிடெட்

7, தம்பு செட்டி தெரு, மதராஸ்

The Vanguard Insurance Company Ltd.

9-9 A., Blacker's Road, Mount Road, Madras

POINTERS OF PROGRESS

- Lowest Expense Ratio
- Highest Bonus Possibilities
- Cent per cent Security to Policy-holders
- Excellent terms to Field Workers
- Decent return to Share holders

See whether we satisfy all these requirements.
If you are satisfied, Tell others. If not, Tell us.

Total Investments in Government and other Approved Securities : Rs. 3¾ lakhs.

H. D. RAJAH,
General Manager.

புதுப் புத்தகங்கள்

சத்தியமூர்த்தி

[விவேக சிந்தாமணி பிரசுரம், ஆடம்தெரு, மயிலாப்பூர், சென்னை விலை ரூ. 1—0—0].

ஸ்ரீ சத்தியமூர்த்தி மறைந்து ஒரு வருஷ காலமாகியும், அவர் பல்வேறு துறைகளில் செய்த சேவைகளைப்பற்றி இதுவரை ஒரு புஸ்தகமாவது உயர்ந்த முறையில் வெளிவரவில்லை. அவருடைய வாழ்க்கையைப் பல பிரபலஸ்தர்களைக் கொண்டு எழுதச் செய்து தொகுத்து முதன் முதலாகத் தமிழ் நாட்டுக்கு அர்ப்பணம் செய்த பெருமை மயிலாப்பூரிலுள்ள 'விவேக சிந்தாமணி' பிரசுரகர்த்தர்களைத்தான் சார்ந்ததாகும்.

ஸ்ரீ சத்தியமூர்த்தி தமிழ்நாட்டுக்கும், இந்தியாவுக்கும் செய்த மாபெரும் சேவைகளைப்பற்றி நாம் அதிகம் கூறுவதற்கில்லை. தமிழ் மக்களே நன்கு அறிவார்கள். ஸ்ரீமான்கள் முத்துரங்க முதலியார், டாக்டர் சுப்பராயன், கே. பாஷ்யம் முதலிய தலைவர்களும், ஸ்ரீமான்கள் சங்கு சுப்பிரமண்யம், ராமரத்னம், வி. ஸி. கோபாலரத்னம், முதலிய எழுத்தாளர்களும், சத்தியமூர்த்தியின் சகோதரர் ஸ்ரீ சுப்பிரமணிய அய்யரும், நமது ஒப்பற்ற தலைவரின் பல்வேறு தொண்டுகளைப் பற்றி ரஸமாக எழுதியிருக்கின்றனர். இவர்களெல்லோரும் அவருடன் நெருங்கிப் பழகிய ஆசாமிகள். மற்றும் ஸ்ரீமான்கள் ஸர் ஸி. பி., புலாபாய் தேசாய், கனம் எம். ஆர். ஜயகர் முதலியவர்களுடைய அபிப்பிராயங்கள் இதில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. மொத்தத்தில் தலைவர்களின் சரித்திரத்தை இம்மாதிரியான உயர்ந்த முறையில் முன்பு வேறு யாரும் வெளியிட்டதில்லையென்றே கூறலாம்.

இப்புஸ்தகத்தின் அட்டை அழகொன்றே நம்மை வசீகரிக்கிறது. அழகாகக் கோர்க்கப்பட்ட முத்துப் போன்ற எழுத்துக்கள், இடையிடையே சித்திரங்கள், ரஸமான துணுக்குகள் இவைகளெல்லாம்சேர்ந்து இப்புஸ்தகத்தை மேன்மைப் படுத்துகின்றன. விலை ரூபா ஒன்றுதான். தமிழர் ஒவ்வொருவர் கையிலும் இப்புஸ்தகம் இருக்கவேண்டியது மிகவும் அவசியம்.

விவேக சிந்தாமணி பிரசுரம் மீண்டும் ஆரம்பமாகி யிருப்பதைச் சந்தோஷத்துடன் வரவேற்கிறோம். 'கமலாம்பாள்' என்ற பிரபல நவீனம் இதன் மூலமாகத்தான் பிரசுரிக்கப் பட்டது இனியும் இப்பிரசுர கர்த்தர்கள் 'கமலாம்பாளை'ப் போன்ற உயர்ந்த புஸ்தகங்களை வெளியிடுவார்கள் என எதிர்பார்க்கிறோம்.

பாசம்

சிறுகதைகள்

[ஆசிரியர்: சங்கரராம். பிரசுரம்: ஏ. என். பூர்ண அண்டு சம்பெனி, 6, முதல் தெரு, அபிராமபுரம், தேனும்பேட்டை, மயிலாப்பூர், சென்னை. விலை ரூபா 2-8-0.]

எழுத்தாளர் உலகிலும், வாசகர்கள் உலகிலும் ஸ்ரீ சங்கர ராமை அறியாதவர்கள் ஒரு சிலரே இருப்பார்கள். முதன் முதலாக நம் தமிழ்நாட்டில் சிறுகதை எழுதத் தொடங்கியவர்களில் இவரும் ஒருவர். முதலில் இவர் ஆங்கிலத்தில் எழுதத் தொடங்கி, "காவேரிக் குழந்தைகள்" என்ற புஸ்தகத்தை வெளியிட்டார். பின்பு இவர் அதே மாதிரியான கதைகளைத் தமிழிலும் எழுத ஆர்வம் கொண்டார். இப்புஸ்தகத்தில் 14 சிறுகதைகள் வெளிவந்திருக்

கின்றன. இவைகளில் சில நம் "பாரத மணி"யிலும் வெளிவந்திருக்கின்றன. இதிலுள்ள ஒவ்வொரு கதையிலும் நாம் பாசத்தையும், அன்புத் தளையையும் பார்க்கிறோம். 'பாசம்', 'இனம் இனத்தோடு', 'மனப் புண்ணுக்கு மருந்துண்டு', 'கடைசி வேட்டை' முதலிய கதைகளில் ஆசிரியர் 'அன்பை' அற்புதமாகச் சித்தரித்திருக்கிறார். எளிய கம்பீரமான வசனநடை. தமிழ் வாசகர்களுக்கு இதை ஒரு நல்ல புஸ்தகமாகச் சிபார்சு செய்கிறோம்.

புஷ்ப ஹாரம்

[எழுதியவர் : ஸ்ரீமதி ஜெயலக்ஷ்மி ஆர். ஸ்ரீனிவாசன். கிடைக்குமிடம் : அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை. விலை ரூபா 1-8-0.]

இது இவ்வாசிரியையால் வெளியிடப் பட்டிருக்கும் இரண்டாவது புஸ்தகமாகும். 'லக்ஷ்மீ கடாக்ஷம்' முதலிய பல சிறுகதைகளடங்கிய புஸ்தகம் முன்பு வெளி வந்தது. இவருடைய தமிழ் நடை வரவரத் தெளிவும், விருவிருப்பும், சுத்தமாகவும் வளர்ந்து வருவதை இப்புத்தகத்தில் காண்கிறோம். சுதேசமித்திரன் ஆசிரியர் கூறுவதே போல "இவர் அனாயாசமாக உலகத்தை அளந்து காட்டியிருப்பது"போல் எழுதுகிறார்.

இத்தொடர்கதை 'புஷ்ப ஹாரம்' முதலிலிருந்து கடைசி வரை மிகவும் ரஸமாக இருக்கிறது. ஒரே மூச்சில் வாசித்து முடித்துவிட வேண்டுமென்ற ஒரு அவா தட்டுகிறது. இதில் வரும் பாத்திரர்களான சுந்தரேசன், ஜானகி, லக்ஷ்மி, அம்பி, சரஸ்வதியம்மாள் முதலியவர்கள் குணவிசயங்களைச் சித்தரித்திருப்பது தத்ரூபமாக இருக்கிறது. வழவழ வென்று முகக்ஷவரம் பண்ணிக்கொண்டு வெளியே ஓடி மறைந்த சுந்தரேசன் கடைசியில் தாடி சகிதமாகக் காட்சியளிக்கும் வரையில், நமக்கு அவரைப்பற்றிய ஞாபகமாக இருக்கிறது! இப்புஸ்தகத்தை வாசித்து முடித்ததும், ஒரு ஸ்திரீக்கு ஒரு நல்ல புஸ்தகம் எழுதத் தெரியாது என்று கூறுவது பொய்யாகி விடுகிறது.

சமூகத்தில் ஸ்திரீகளின் நிலைமை

[காந்திஜியின் வியாசங்களி லிருந்து தொகுத்து மொழி பெயர்க்கப் பட்டது. கிடைக்குமிடம் : அகில பாரத சர்க்கா சங்கம், தமிழ்நாட்டுக்கிளை, திருப்பூர்.]

நம்நாட்டின் மாபெருந் தலைவர் மகாத்மா காந்தி இந்தியப் பெண் மக்களின் முன்னேற்றத்தைக் கருதி எழுதப்பட்ட வியாசங்களிலிருந்து ஸ்ரீ சங்கர்லால் பேங்கர் அவர்களால் தெளிவான நடையில் மொழிபெயர்க்கப்பட்டுத்தொகுத்த புஸ்தகம் இது. பெண்களின் முன்னேற்றமே நம்நாடு முன்னேற்றமடையும் வழி என்பதையும், அவர்களுடைய விடுதலையே நாட்டின் விடுதலை என்பதையும் நன்றாக உணர்ந்தவர் மகாத்மாஜி. உயர்ந்த கருத்துக்கள் அடங்கிய இப்புத்தகத்தைத் தமிழன் ஒவ்வொருவனும் படிக்கவேண்டியது அவசியம். மற்றொரு பாராட்டத்தக்க விஷயம் என்னவென்றால் இப்புஸ்தகம் நாட்டுக் காகிதத்தில் நன்றாக அச்சிடப் பட்டிருப்பதே. ஆனால் இப்புஸ்தகத்தின் விலை குறிப்பிட்டவில்லை.





குழந்தைகளுக்கு ஆரோக்யம் அளிக்கிறது

I.T.L.

ஏதோ ஒருவித மாறுபாட்டுடன், சிடுமூஞ்சித்தனம் பண்ணி, எவ்வித காரணமும் வெளிப்படையாக இல்லாமல், குழந்தை ஓலமிட்டழுதால், அதற்கு ஜீரண சக்திக் கோளாற்றினால் ஏற்பட்ட தாங்கொணாதவலியே காரணமாக இருக்கும். அம்மாதிரி சந்தர்ப்பங்களில் கிரைப் சிரப் ஐ.டி.எல் உடனடியான சிகித்ஸை செய்வதோடு, மேற்கொண்டு விருத்தியாகக் கூடிய பெரும் இன்னல்களையும் வராமல் தடுக்கிறது. கைவசம் எப்போதும் ஒரு பாட்டிலை வைத்திருங்கள்.

கிரைப் சிரப்

கவர்ன்மெண்டு இண்டஸ்டிரியல் & டெஸ்டிங் லேபரடரி, மல்லேசுவரம், பெங்களூர்.

ஏஜண்டுகள் :—மெஸர்ஸ் பெஸ்டு அண்டு கோ., லிமிடெட்.
தபால் பெட்டி 63, மதராஸ்

மணிப்புரி சமஸ்தானம்

பர்மாவை ஆக்கிரமித்துக் கொண்ட ஜப்பானியர் முதன் முதலாக இந்திய மண்ணில் கால் வைத்திருப்பது இம்மணிப்புரியில்தான். இதுவரை இந்தியாவைப் படையெடுத்தவர்களில் யாரும் வடகிழக்கு எல்லை வழியாக உள்ளே பிரவேசித்ததில்லை. 'மணிப்புரி நடனம்' என்று கூறுவார்களே அதே மணிப்புரி தான் இது.

மணிப்பூரி சமஸ்தானம் இந்தியாவின் வடகிழக்கு மூலையில் இருக்கிறது. இதற்குத் தலை நகரம் இம்பால். இத் தலை நகரிலிருந்து டாமு, டிடிம், திமாபூர், ஸில்சார் முதலிய இடங்களுக்கு நான்கு முதல் தரமான ரஸ்தாக்கள் செல்கின்றன.

இந்நாட்டில் நாகரிகமற்ற பல்வேறு ஜாதியினர், (முக்கியமாக மலை ஜாதியினர்) வசித்து வருகின்றனர். இதன் பூமி மிகவும் சாரமுள்ளதாகும். இந்திய சர்க்காருக்குட்பட்ட ஒரு சுதேச ராஜாவால் இது ஆளப்பட்டு வருகிறது. சுமார் 50 வருஷங்களுக்கு முன்னர் இச் சமஸ்தானம் மிகவும் க்ஷீண தசையிலிருந்தது. ஜனங்கள் வேட்டை யாடி ஜீவனப் செய்துவந்தனர். வர்த்தகங்கள் அபிவிருத்தி யடையவில்லை. அப்பொழுது சர்க்காருக்கு ஜனங்கள் வரி செலுத்துவது கிடையாது. பதினாறு வயதுக்கு மேற்பட்ட ஆடவர்கள் எல்லோரும் நான்கு வகுப்புகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு வகுப்பாரும் சர்க்காருக்கு மாறி மாறி, பத்து நாட்கள் வேலை செய்வது வழக்கம். மக்களுக்குப் படிப்பென்பதே கிடையாது. ஒழுக்கமும் குன்றி வசித்து வந்தனர். பழிக்குப் பழி வாங்குதல் முதற் கடமையாகவும் உத்தமமான தர்மமாகவும் இவர்கள் கொண்டிருந்தனர். அப்பொழுது போக்குவரத்து சாதனங்கள் அதிகம் இல்லை.

இப்பொழுது மணிப்புரி மிகவும் செழித்து வளர்ந்திருக்கிறது. ஜனங்கள் நாகரிகமடைந்து வாழ்கின்றனர். கலைகளில் தேர்ச்சி யடைந்திருக்கின்றனர். மணிப்புரி நடனம் என்பது உலகப் பிரசித்தம். இங்கு சுமார் ஐந்தரை லட்சம் ஜனங்கள் வசித்து வருகின்றனர். இப்பொழுது ஆண்டுவரும் மகாராஜா வின் பெயர் ஸ்ரீ போத்சந்திரசிங், இவர் ஜெய்ப்பூர், ஆஜ்மீர் முதலிய இடங்களில் கல்வி கற்றவர்.

இம்பால் மணிப்புரிக்குத் தலைநகர மட்டுமல்லாது அஸ்ஸாம் பர்மா முனைதளமாகவும் விளங்குகிறது. இதை ஜப்பானியர் பல தடவை குண்டு வீசித் தாக்கியிருக்கின்றனர். இப்பொழுது அவர்கள் இதை பிடிக்கவும் முயற்சி செய்கின்றனர்.

தோலுக்குத் தகுந்த சம்பளம்!

"ஒரு உத்தியோகத்தை ஆங்கிலேயன் பார்த்தால் அவனுக்கு ரூபா 2,000 சம்பளம். அதே உத்தியோகத்தை நான் பார்த்தால் எனக்கு ரூபா 8,00 தான் சம்பளம். இந்த வித்தியாசம் ஏன் தெரியுமா? அவன் தோல் வெளுப்பாம்! என் தோல் கருப்பாம்!"

—ஸ்ரீ சத்தியமூர்த்தி.

ஆங்கிலேயன் உலகத்தின் போலீஸ்காரனா?

இங்கிலாந்தில் ஒரு இடத்தில் ஸ்ரீ சத்தியமூர்த்தி பிரசங்கம் செய்து கொண்டிருக்கையில், "இந்தியாவைவிட்டு ஆங்கிலேயர்கள் வெளியேறிவிட்டால், கொள்ளை மிதமிஞ்சிப் போய் இந்தியா பாழாய்ப் போகாதா ?" என்று ஒருவர் கேட்டார். "ஆங்கிலேயன் உலகத்துக்கு போலீஸ்காரனா என்ன ?" என்று ஸ்ரீ சத்தியமூர்த்தி பட்டென்று பதில் கூறினார்.

7, கௌன்ஸில் ஹௌஸ் தெரு, கல்கத்தா.

[illegible] மதராஸ் பிராஞ்சு :—362, சைனா பஜார் ரோட், எஸ்ப்ளனேட், சென்னை.

இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் கிளை ஆர்கனைசேஷன் & பிரதம ஏஜன்ஸிகாரியாலயங்கள்

அவன் ஊக்கங் குறை
யாமல் இருக்கச் செய்வது
உங்கள் வேலை!
DALDA
VANASPATI
The DALDA
COOK B
Price
B109 P.O. Box No. 383, Bombay
ப்மார்களே: உங்கள் குடும்பத்திற்கு ஒவ்வொரு தடவை
மயல் செய்யும்பொழுதும் உங்களால் எவ்வளவு செய்யலா
ன்பதை உணர்கிறீர்களா? உங்கள் சமையல் திட்டங்களி
, அவைகளைத் தயாரிக்கும் முறையிலுமே உங்கள் குழந்
கள் ஆரோக்கியமான ஊக்கத்தைப் பெறுவதோ, அல்லது
க்கும் உபயோகமில்லாமல் ஊக்கமற்றவர்களாக ஆவதோ
க்கிறது. இது சமைப்பதை மேலும் உற்சாகமுள்ள
வும், முக்கியமானதாகவும் செய்கிறதில்லையா? உணவுகள்
கமளிக்கும் தரத்தில் வேற்றுமையுள்ளவை. அதிக ஊக்க
ப்பவை சில. வெறும் ருசியும், திருப்தியுமளிக்கக் கூடியவை
அமித உணவு உண்டும் அநேகர் ஊக்கமற்றுக் காணப்
இதனால்தான். ஆனால் எல்லா உணவுகளையும் அதிக
ளதாகச் செய்துவிடலாம். அவைகளை வைடமின்
டால்டாவைக் கொண்டு தயார் செய்வது இதற்கு
க யிருக்கும். டால்டா இயற்கையின் முக்கியமான
சத்துக்களை" அளிக்கிறது — இந்த சத்துக்கள் நாம்
ரணமாக சாப்பிடும் உணவுகளில் மிகக் குறைவு.
டால்டா உணவுகளை
மேலும் ஊக்கமுள்ள
தாக்குகிற தென்பதை
நிரூபித்துள்ளோம்
டால்டா ஊக்கமளிக்கிறது.
THE HINDUSTAN VANASPATI MANUFACTURING CO., LTD.



மற்றொரு இந்திய ஞாபகார்த்த சிலை

மைசூர் சந்தன சோப்

குணத்திலும், மணத்திலும், மேம்பாட்டிலும் நிகரற்றது

எங்கும் கிடைக்கும்:

கவர்ண்மென்ட் சோப் பாக்டரி, பெங்களூர்